வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 06.05.2024 திங்கட்கிழமை இதழ் : 127 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# பலாலி விமான நிலையத்தை இந்தியா அபிவிருத்தி செய்யும்!

## விமான சேவைகள் அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 06

**யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்யவுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஒரேயொரு விண்ணப்பமே கிடைத்தது. இதனால், இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளதாக விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே. டி. எஸ். ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, திட்ட யோசனைகள் விரைவில் தயாரிக்கப்படவுள்ளன என்று தெரிவித்த அவர், எதிர்வரும் ஜூலை மாதம் முதல் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து எயார் இண்டிகோ விமான சேவை நிறுவனமும் விமான பயணத்தை முன்னெடுக்கும் எனவும் தெரிவித்தார்.

அலையன்ஸ் எயார் நிறுவனம்

11

# தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காணமுடியாதது கவலை

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



கொழும்பு, மே 06

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்றை வழங்க முடியாமல் போனமை வருத்தமளிக்கிறது" - இவ்வாறு கூறியுள்ள நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவரும் ஜனாதிபதி ரணிலின் சர்வதேச காலநிலை ஆலோசகருமான எரிக் சொல் ஹெய்ம், "13ஆவது அரசமைப்பு தமிழ் மக்களின் அரசியல் பிரச்னையை தீர்ப்பதற்கான அடிப்படை அடித்தளமாக அமைய வேண்டும்", என்றார்.

அண்மையில் வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு சென்ற எரிக் சொல்ஹெய்ம் பல தரப்பினரையும் சந்தித்து உரையாடினார். இந்தப் பயணத்தின் முடிவில் செய்தியாளர்களை

11

நாகை - காங்கேசன் படகு சேவை:

# ரூ. 2.5 கோடி செலவை இந்திய அரசே ஏற்கும்!

கொழும்பு, மே 06

நாகபட்டினம் - காங்கேசன்துறை படகு சேவையில் மாதம் 25 மில்லியன் ரூபாய் செலவை இந்திய அரசாங்கம் ஏற்க முடிவு செய்துள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நாகபட்டினம் - காங்கேசன்துறை இடையிலான கப்பல் சேவை மே 13ஆம் திகதி ஆரம்பமாகும். இந்த கப்பல் சேவையை தனியார் நிறுவனமே

11

# ஓ. எல். பரீட்சை இன்று ஆரம்பம்!

கொழும்பு, மே 06

க. பொ. த. சாதாரண தர பரீட்சை இன்று திங்கட்கிழமை நாடு முழுவதும் ஆரம்பமாகின்றது.

பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

11

# 23 சதுர கி. மீ. பரப்பிலேயே இன்னும் மிதிவெடி அகற்றப்பட வேண்டும்!

## சர்வதேச மாநாட்டில் இலங்கை தெரிவிப்பு

ஜெனிவா, மே 06

வடக்கு, கிழக்கில் இன்னமும் 23 சதுர கிலோமீற்றர் பகுதியிலேயே மிதிவெடி மற்றும் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளன என்று சர்வதேச கண்ணிவெடி ஒழிப்பு தொடர்பான மாநாட்டில் இலங்கை தெரிவித்துள்ளது.

சுவிற்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெற்ற இந்த சர்வதேச மாநாட்டில் இலங்கையின் கண்ணிவெடி அகற்றும் செயல்பாட்டுக்கு பாராட்டும் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

130 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த மாநாட்டை மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலுக்கான ஜெனிவா சர்வ தேச மையம் மற்றும் ஐக்கிய

11

# தமிழர்களின் ஒற்றுமையை காட்ட ஜனாதிபதி தேர்தலை பாவிப்போம்!

## கருணாகரம் எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 06

தமிழர்கள் தங்கள் ஒற்றுமையை காட்டுவதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலை பயன்படுத்த வேண்டும். ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி எங்கள் ஒற்றுமையை நாங்கள் வெளிப்படுத்த வேண்டும் - என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

2009இற்கு பின்பு தமிழ் மக்கள் மேலும் மேலும் பலவீனமடைந்து ஓர் இக்கட்டான சூழ் நிலையில் - நடுச்சந்தியில் - திக்குத்தெரியாமல் நிற்கும் நிலையில், தற்போதிருக்கும் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கொள்கைகள் ஒன்றாக இருந்தாலும் எமக்குள் பிளவுபட்டு இருப்பது எதிரிகளுக்கு சாதகமாக உள்ளது.

வடக்கு, கிழக்கு சிவில் சமூக குழு சந் திப்பை ஒழுங்குபடுத்தி ஒரே மேசையில்

11

# தமிழ் பொது வேட்பாளர் தரப்பிடம் சஜித் எதற்காக தூதுவிட வேண்டும்?

## கருணாகரத்திடம் மனோ கேள்வி

கொழும்பு, மே 06

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படவேண்டுமென மும்முரமாக செயல்படும் உங்களுக்கு எதற்காக சஜித் தூதுவிட வேண்டும் என எனக்குத் தெரியவில்லை - இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கோவிந்தன் கருணாகரம் எம். பிக்கு பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம். பி. நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"மனோ மூலம் தூது விடாது எம்மிடம் நேரடியாக சஜித் கூற வேண்டும்" என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்

11

# கைபேசிக்கு அடிமையான மகனே தனது தாயை கொன்றிருக்கலாம்!

## தெல்லிப்பழை பெண் மரணத்தில் சந்தேகம் வெளியிடுகிறது பொலிஸ்!

கொழும்பு, மே.06

கைபேசி விளையாட்டுக்கு அடிமையான சிறுவனே தனது தாயாரைக் கொன்றிருக்கலாம் என்று தெல்லிப்பழை பெண்ணின் மர்ம மரணம் குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளது பொலிஸ்.

அத்துடன், சிறுவர்களுக்கு கைபேசிகளை வழங்குவது தொடர்பில் அவதானத்துடன் செயல்படுமாறு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பழையில் மர்மமாக உயிரிழந்த நிலையில்

11

# வருடத்தில் 1700 குழந்தைகள் தத்துக்கொடுக்கப்படுகின்றனர்!

## பதிவாளர் திணைக்களம்

கொழும்பு, மே 06

நாட்டில் ஒரு வருடத்தில் 1,700 குழந்தைகள் தத்துக் கொடுக்கப்படுகின்றனர் என்று பதிவாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம் தெரிவித்தார்.

தத்துக்கொடுக்கப்படும் குழந்தைகளில் அதி களவானவர்கள் வெளிநாட்டவர்களுக்கே வழங்கப்படுகின்றனர் என்று ஊடகங்களின் கேள்விக்கு அவர் பதிலளித்துள்ளார்.

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

தெற்கில் அவ்வப்போது நடத்தப்படும் கருத்துக்கணிப்புகள் பற்றி பல தடவைகள் இந்தப் பத்தியில் எழுதியிருக்கின்றோம்.

இந்தக் கருத்துக்கணிப்புகள் பற்றி - அவற்றின் நம்பகத்தன்மை பற்றி பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன. ஆனால், கருத்துக்கணிப்புகளில் கிடைக்கும் பெறுபேறுகள்தான் தேர்தலில் பிரதிபலிக்கும் என்றும் யாரும் நம்புவதும் இல்லை.

அண்மையில், ஒரு காணொலி சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தது. அதில் ஒருவர், இந்த தமிழ் பொது வேட்பாளர் பற்றி கேள்வி கேட்பார். அதற்கு மற்றையவர்கள் பதில் சொல்வர். அந்தக் காணொலியை வெளியிட்டவர் எதற்காக வெளியிட்டார் என்பது ஆராய்ச்சி செய்து விடை கண்டுபிடிக்கப்பட வேண்டியது அல்ல.

இன்னமும் அந்த விடயம் ஒரு பேசுபொருளாகவே இருந்து கொண்டிருக்கின்றது. பொதுவேட்பாளர் போட்டியிடுவாரா? அப்படி போட்டியிட்டால் எந்தெந்தக் கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடுகிறார்? அதற்கும் மேலாக, யார் அந்த பொதுவேட்பாளர் என்பன போன்ற கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே அது மக்கள் மத்தியில் பிரசாரத்துக்கு உட்படுத்தப்படும்.

இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் தான் போட்டியிடப்போவதாகக்கூட உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. ஆனாலும், அவர் போட்டியிடுவது பெரும்பாலும் உறுதியான ஒன்றுதான். ஆனால், தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயம் இப்போதுவரை முடிந்த முடிவான ஒன்றல்ல. அப்படியிருக்கையில், பொதுவேட்பாளர் பற்றி தமிழ் மக்களிடம் கருத்துக் கேட்பதும் அவர் ஏதோ தேர்தலில் போட்டியிடுவது அதில் வெற்றி பெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்காக என்பது போல - அப்படி அவர் வெற்றிபெற முடியாதபோது எதற்கு போட்டியிட வேண்டும் என்று பேசுவதும் எந்த நோக்கத்திற்கானது என்பது தெரிந்தது தான்.

அது ஓர் உதாரணத்திற்கானது. அதுபோலத்தான் இந்தக் கருத்துக் கணிப்புகளும். அதனை எடுப்பவர்கள் யார்? அவர்கள் அதற்காக ஏன் பெருந்தொகைப் பணத்தை முதலிடுகிறார்கள் என்பவற்றை கேள்விக்கு உட்படுத்தினால் நமக்கு விடை தானாகக் கிடைத்துவிடும்.

இதுவரை வெளிவந்த கருத்துக்கணிப்புகள் அனைத்திலுமே ஜே. வி. பியின் தேசிய மக்கள் சக்தியே முன்னணியில் இருப்பதாகவும் அதற்கு அடுத்த நிலையில் சஜித் இருக்கிறார் என்றும் மூன்றாவது ஆளாகவே ரணில் இருக்கிறார் எனவும் இதுவரை வெளியிடப்பட்ட கருத்துக்கணிப்புகள் எல்லாமே தெரிவித்து வந்தன. அது எதற்கானதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தையும் நாம் முன்னர் பல தடவை இந்தப் பத்தியில் கிளப்பியிருந்தோம். சஜித் தரப்பை நீங்கள் தனித்து நின்றால் வெற்றிபெறமாட்டீர்கள் என்ற பயத்தை ஏற்படுத்துவதன் மூலம் சஜித் - ரணில் தரப்பிடையே ஒரு “திருமணத்தை“ நடத்தி அதன்மூலம் அந்த அணியின் வெற்றியை உறுதிசெய்வதே நோக்கமாக இருக்கவேண்டும் என்ற எமது சந்தேகம் பின்னர் சரி என்றே உணரவைத்தது.

தானே ரணிலை விட அதிக செல்வாக்குடன் இருக்கின்றபோது இருவரும் சேர்ந்தாலும் தானே ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் என்றும் அதிக செல்வாக்குள்ள நான் எதற்காக ரணிலுக்கு அதனை விட்டுக்கொடுக்க வேண்டும் எனவும் சஜித் கேள்வி எழுப்பினார் என்று முன்னர் செய்திகள் வெளிவந்திருந்தன.

இப்போது வெளிவருகின்ற கருத்துக்கணிப்புகள் சஜித்தின் ஆதரவு தளத்தை ரணில் மெல்ல மெல்ல பெற்று முன்னேறி வருகிறார் என்று வெளிவருகின்றன.

இன்னமும், அநுரவே மேலே இருப்பதுபோலவும் ஆனால், சஜித்தை ரணில் முந்துவதாகவும் கருத்துக் கணிப்புகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. கடைசியாக கொழும்பில் ஒரு பிரபல இணைய ஊடகம் நடத்திய கருத்துக்கணிப்பில் சஜித்தை ரணில் முந்துவதாகவே அவர்களது கணிப்பு சொல்வதாகவும் சுமார் இருபத்தி ஐயாயிரம் பேரிடம் அந்தக் கருத்துகணிப்பு நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மைக் காலங்களில் ரணில் எதையாவது சாதித்துக் காட்டியதாகவும் இல்லை. ஆனாலும் அவரின் ஆதரவு அதிகரிக்கத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுவது கவனிக்கப்பட வேண்டியது.

இது எதனால் என்பதை புரிந்து கொள்வது மிகச்சுலபமானது. தனக்கே அதிக ஆதரவு மக்கள் மத்தியில் இருக்கும்போது எதற்காக தான் ரணிலுக்கு விட்டுக்கொடுக்கவேண்டும் என்ற சஜித்தின் விவாதத்தை முடித்துவைக்க எடுக்கப்படும் முயற்சிதான் இது என்பது நாம் புரிந்துகொள்ளக் கூடியதே.

இனி என்ன நடக்கும் என்பதற்கு சோதிடம் பார்க்க வேண்டியதில்லை.

ஆனால், தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் ஓர் இரகசிய கருத்துக் கணிப்பை நடத்திய சீனத் தூதரகம், அதனை பீஜிங்குக்கு அனுப்பியிருந்ததாகவும் அதனை பார்த்துவிட்டு அதுபற்றி நேரில் ஆராய்வதற்காகவே சீன கம்யூனிஷ்ட் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களைக் கொண்ட தூதுக் குழு ஒன்று அண்மையில் இலங்கை வந்திருந்ததாம்.

அந்த கருத்துக்கணிப்புகளில் நம்பிக்கை கொள்ளாத சீன கம்யூனிஷ்ட் கட்சியின் உயர்மட்டக்குழுவினர் தாம் கொழும்பில் நின்றபோது கம்பஹா மாவட்டத்தில் ஒரு தொகுதியில் மட்டும் நேரடியாகவே ஒரு கருத்துக்கணிப்பை நடத்தியதாகவும் இப்போது ஒரு செய்தி வெளிவந்திருக்கின்றது.

முன்னர் தனியார் நிறுவனத்தின் மூலம் செய்த கணிப்புக்கும் தமது நேரடிக் கணிப்புக்குமிடையே ஒற்றுமை - வேற்றுமைகள் இருக்கின்றனவா என்பதைத் தெரிந்துகொண்டே சீனக் குழு தாயகம் திரும்பியிருக்கின்றது.

அடுத்த மாதம் கிடைக்கும் என்று நம்பப்படும் ஐ. எம். எவ். அடுத்த கட்ட கடன் ஈரானிடமிருந்து மலிவு விலையில் கிடைக்கவிருக்கும் எரிபொருளால் அதன் விலைகள் குறைக்கப்படுகின்றமை, இலங்கை வங்குரோத்து நாடு என்ற நிலையிலிருந்து உத்தியோக பூர்வமாக வெளியே வரவிருப்பதான அறிவிப்பு என்பவை தனது நிலையை மாற்றியமைக்கும் என்று நம்பும் ஜனாதிபதி ரணில், அதன் பின்னரே தான் போட்டியிடுவது பற்றிய உத்தியோக பூர்வ அறிவிப்பை வெளியிடவிருக்கிறார்.

அவ்வாறு அவர் வெளியிட்ட பின்னர், தனக்கான ஆதரவு பல மடங்கு பெருகலாம் என்ற அவரது நம்பிக்கை வீண்போகாமல் இருந்தால் அடுத்த மாத இறுதிவாக்கில் பல அரசியல் மாற்றங்கள் நிகழத் தொடங்கலாம்.!

- ஊர்க்குருவி.

## பாக்கு நீரிணையை நீந்தி கடந்து சாதனை



தலைமன்னார், மே 06

தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரை - பாக்ஜலசந்தி கடலை 10 மணி நேரம் 10 நிமிடங்களில் 12 நீச்சல் வீரர்கள், வீராங்கனைகள் அஞ்சல் ஓட்ட முறையில் நீந்திச் சாதனை படைத்தனர்.,

மகாராஷ்ரா மாநிலம், தானே பகுதியில் செயல்பட்டு வரும் ராம் சேது திறந்த நீர் நீச்சல் அறக்கட்டளையை சோந்த மகராஷ்ரா மாநிலத்தை சேர்ந்த 12 நீச்சல் வீராங்கனைகள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையுள்ள சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவிலான பாக்ஜலசந்தி கடற்பரப்பை நீந்திக் கடப்பதற்காக இந்திய வெளியுறவுத் துறை, இலங்கைத் தூதரகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு என்பனவற்றின் அனுமதியைக் கோரினர்.

இந்திய - இலங்கை இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் இராமேஸ்வரம் மீன்பிடி இறங்குதளத்திலிருந்து இரண்டு படகுகளில் தங்கள் நீச்சல் பயிற்சியாளர் தலைமையில் மீனவர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவினர் இலங்கை தலைமன்னார் சென்றனர்.

தலைமன்னாரிலிருந்து காலை 6. 30 மணிக்கு கடலில் குதித்து நீந்தத் தொடங்கிய 12 பேரும் மாலை 4. 40 மணியளவில் (10 மணி நேரம் 20 நிமிடங்களில் நீந்தி) தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியை வந்தடைந்தனர். நீந்தி சாதனை படைத்தவர்களை சுங்கத்துறை, மரைன் பொலிஸார், சுற்றுலாப்பயணிகள் அரிச்சல்முனை யில் வரவேற்றனர். (எ)

## ஓ. எல். பரீட்சை பாதுகாப்புக்கு விசேட திட்டம்

கொழும்பு, மே 06

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பாதுகாப்புக்காக விசேட வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்காக 2000 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இன்று நாடளாவிய ரீதியில் 3, 527 பரீட்சை நிலையங்களில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ)

## கடல் கொந்தளிக்கும்; மீனவர்களே அவதானம்

கொழும்பு, மே 06

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி கற்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற் பிரதேசங்களில் கடல் அலைகளின் உயரம் (2. 5 - 3. 0) மற்றும் அலையின் கால அளவு (12 - 16) வினாடிகள் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரையில் கடல் அலைகள் நிலத்தை நோக்கி வருவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

எனவே, கல்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந் தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பு அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படக்கூடும்.

எனவே கடற்பரப்புக்களில் மீன்பிடி மற்றும் கப்பல் போக்குவரத்தில் ஈடுபடும் கடற்றொழில் மற்றும் கப்பல் போக்குவரத்து சமூகத்தினர் இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

## நடிகர் பாண்டியராஜன் யாழ்ப்பாணம் வருகை



யாழ்ப்பாணம், மே 06

தென்னிந்திய நடிகரும் இயக்குநருமான ஆர். பாண்டியராஜன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

இந்நிலையில் கொழும்புத்துறையில் இடம்பெற்ற சிறப்புப் பட்டிமன்றத்தில் கலந்துகொண்டார்.

“மக்களுக்கு சினிமாவும் சீரியலும் வழிகாட்டுகிறதா? வழிமாற்றுகின்றதா?” என்ற தலைப்பிலும் “இன் றைய சூழ்நிலையில் பிறருக்கு உதவி செய்வது ஆபத்தே? ஆனந்தமே?” என்ற தலைப்பிலும் இரு பட்டிமன் றங்கள் நடைபெற்றன.

இந்தப் பட்டிமன்றத்தினை காண பல இடங்களிலும் இருந்து மக்கள் வருகை தந்தனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.05.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், சித்திரை 23
“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகளின் பயம்

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் சந்தேகம் வெளியிடுபவர்கள் - ஒரு விடயத்தை கேள்வியாக முன்வைக்கின்றனர். அதாவது, மக்கள் வாக்களிக்காவிட்டால் என்ன செய்வது? இந்தக் கேள்வி அடிப்படையிலேயே தவறானது. ஏனெனில், மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் கூறுவதைக் கேட்டு மக்கள் வாக்களிக்கவில்லையாயின், அதன் பின்னர் அவ்வாறானவர்கள் அரசியலை முன்னெடுப்பதற்கே தகுதியற்றவர்களாவர். தாங்கள் கூறுவதை மக்கள் கேட்கமாட்டார்கள் என்றால், மக்களின் சார்பில் கோரிக்கைகளை முன்வைக்கும் தகுதியையும் கட்சிகள் கோரக்கூடாது.

75 வருடங்களாகத் 'தமிழ் மக்கள் - தமிழ்த் தலைவர்கள் என்போர் காண்பித்த வழிகளிலேயே சிந்தித்திருக்கின்றனர். ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின்போதும் தமிழ்த் தலைவர்கள் காட்டிய தென்னிலங்கை வேட்பாளருக்கே வாக்களித்திருக்கின்றனர். யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் சரி - அதற்கு பின்னரும் சரி - தமிழ் மக்கள் அவ்வாறுதான் வாக்களித்திருக்கின்றனர். தலைவர்கள் எவ்வழியோ - அவ்வழிதான் நாங்களும் என்பதாகவே அவர்களின் தெரிவுகள் அமைந்திருந்தன.

மக்களுக்கென்று பிரத்தியேகத் தெரிவுகள் இருந்ததில்லை - அரசியலில் அவ்வாறு இருக்கவும் முடியாது. ஒருவேளை, மக்கள் எவரின் வலியுறுத்தல்களும் அறிவுரைகளுமின்றி வாக்களிப்பது உண்மையாயின், இன்று தமிழ்த் தேசியத்தின் பெயரில் அரசியல் செய்யும் பலர் அரசியலிலேயே இருந்திருக்க முடியாது. ஏனெனில், கடந்த 75 வருடங்களாகத் தமிழ் தலைவர்கள் கூறிய எந்தவோர் அரசியல் தீர்வையும் அவர்களால் வெற்றிகொள்ள முடியவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழ் மக்கள் காலத்துக்குக் காலம் தலைவர்கள் காண்பிக்கும் திசைவழியில் நடைபோடுவதற்குத் தயராகவே இருக்கின்றனர். இதுவரையில் இந்த நிலைமையில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் இடம்பெற்ற மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் தென்னிலங்கை வேட்பாளருக்கே வாக்களித்திருந்தனர். ராஜபக்ஷக்களை தோற்கடித்தல் என்னும் அடிப்படையிலேயே தமிழ் வாக்குகள் வழங்கப்பட்டன. அதனையே தமிழ் கட்சிகளின் தலைவர்கள் போதித்தனர்.

மக்கள் அவ்வாறுதான் சிந்தித்தார்கள். அதனால்தான் அவர்கள் அவ்வாறு வாக்களித்தனர் என்று கூறினால் - அது தவறானது. அத்துடன், தமிழ் கட்சிகள் தங்களின் இயலாமையை தாங்களே ஒப்புக் கொள்வதாகவும் அமையும். மக்கள் உங்களின் கட்டுப்பாட்டில் இல்லையென்றால் எதற்காக சில நிலைப்பாடுகளை தமிழ் கட்சிகள் உச்சரிக்க வேண்டும்? நடைமுறையில் அவற்றின் பயன் என்ன?

ஒரு நிலைப்பாட்டை முன்வைத்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பார்களா - என்னும் சந்தேகம் மக்கள்மீதானதா அல்லது தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு கள் மீதானவையா? தாங்கள் வைத்திருக்கின்ற நிலைப்பாடுகள்மீது தங்களுக்கு உண்மையான நம்பிக்கையிருப்பின் அச்சமின்றி அதனை மக்களிடம் கொண்டு செல்லலாம் - அதனை பரிசோதிக்கலாம்.

மக்களின் மனநிலை அறியாமல் நிலைப்பாடுகளை தொடர்ந்தும் உச்சரித்துக் கொண்டிருப்பதிலும் பயனில்லை. அதேவேளை, புதிய தலைமுறை மக்கள் ஆணையில் பங்குகொள்வதற்கான வாய்ப்பையும் வழங்க வேண்டும். யுத்தத்துக்குப் பின்னரான சூழலில் அதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதும் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை ஜனநாயக தளத்துக்கு சரியான வகையில் பொருத்துவதும் முக்கியமானது.

தமிழ் பொது வேட்பாளர் புதிய தலைமுறையை பழைய தலைமுறையின் அரசியல் சிந்தனையோடு இணைப்பதற்கான ஒரு பாலமாகும். இதனைக் கண்டு தமிழ் கட்சிகள் அஞ்சுகின்றன என்றால் - உண்மையில், நமது கட்சிகள் மக்களை பார்த்து அஞ்சவில்லை. மாறாக, தங்களின் நிலைப்பாடு காலாவதியாகிவிட்டதா என்னும் கேள்வியின் அடிப்படையிலேயே சிந்திக்கின்றது. அதுவே, கட்சிகள் மத்தியில் அச்சத்தை விளைவிக்கின்றது. தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்னும் கோரிக்கையும் இந்த அச்சத்தின் வெளிப்பாடுதான்.

# தொல்பொருள் திணைக்களத்தில் பெரும் ஆளணி பற்றாக்குறையாம்!

கொழும்பு, மே 06

ஊழியர் பற்றாக்குறையால் தொல்பொருள் திணைக்களம் தற்போது பெரும் சிரமங்களை சந்தித்து வருவதாக தொல்லியல் துறை இயக்குநர் பேராசிரியர் துசித மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

திணைக்களத்தை சீராக நடத்துவதற்கு 4 ஆயிரத்து 316 ஊழியர்கள் தேவை. ஆனால், 2 ஆயிரத்து 757 ஊழியர்களே உள்ளனர். ஆயிரத்து 559 ஊழியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

தொல்பொருள் விடயங்கள் தொடர்பில் சில ஊடகங்களில் சில சந்தர்ப்பங்களில் வெளிவரும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை. சில சிக்கல்கள் இருப்பினும்கூட அதிகளவிலான தொல்பொருள் இடங்களை அழிந்து விட இடமளிப்பதாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை நாம் ஏற்க முடியாது - என்றார். (ஐ)

# 14 மில்லியன் டொலர் வாகனங்கள் இறக்குமதி!

## இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, மே 06

ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் 14 மில்லியன டொலர் பெறுமதியான, தனியார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையின்படி, இந்த ஆண்டு ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையில் 14.4 மில்லியன் டொலர் பெறுமதியான தனியார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மார்ச் மாதத்தில் மட்டும் இறக்குமதி செய்யப்பட்ட தனியார் வாகனங்களின் பெறுமதி 4.9 மில்லியன் டொலர்களாகும்.

வாகனங்கள் தவிர, ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்று மாதங்களில் 102.6 மில்லியன் டொலர் பெறுமதியான காய்கறிகள் (மைசூர் பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, பருப்பு வகைகள் மற்றும் பிற காய்கறிகள்) இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதே காலப்பகுதியில் 34.8 மில்லியன் டொலர் பெறுமதியான மசாலா பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சித்திரைப்பரணி சொற்பொழிவு!

யாழ்ப்பாணம், மே 06

புத்தூர் கிழக்கு தல்லூரடை அருள்மிகு கன்னியர் வைரவர் ஆலயத்தில் சித்திரை பரணி விழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 108 மகா சங்காபிஷேகமும் சிறப்புப் பூசைகளும் நடைபெறவுள்ளன.

இதைத் தொடர்ந்து, இரவு 07 மணிக்குச் சிவநெறி பிரகாசர் சுதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறும்.

இளம் சைவப்புலவர் ச. நவநீதன் “சித்திரைப் பரணி மகிமை” என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

# பேர்த்தியை காப்பாற்ற முயன்ற பாட்டி மரணம்!

கொழும்பு, மே 06

முச்சக்கர வண்டி மோத முயன்ற பேர்த்தியை காப்பாற்றுவதற்காக குறுக்கு பாய்ந்த மூதாட்டி உயிரிழந்தார்.

காலி - பெந்தோட்டை - ரொபோல்கொடையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அறிய வருவதாவது,

உயிரிழந்த மூதாட்டி, தனியார் கல்வி நிலையத்திலிருந்து தனது பேர்த்தியை அழைத்து வந்துள்ளார். அப்போது, முச்சக்கர வண்டி ஒன்று பேர்த்தியை மோத முயன்றது. அவரை காப்பாற்றுவதற்காக மூதாட்டி குறுக்கே பாய்ந்துள்ளார். இதன்போது, முச்சக்கரவண்டி அவரை மோதித் தள்ளியது. இதில், அவர் உயிரிழந்தார்.

முச்சக்கர வண்டியின் சாரதியும் இந்த விபத்தில் காயமடைந்தார். அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

# மோட்டார் சைக்கிள்கள் மோதி இளைஞர்கள் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 06

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

கொழும்பு - கிம்புலாவல பிரதேசத்தில் நடந்த விபத்தில் மிரிஹான, மாதிவெல பிரதேசங்களை சேர்ந்த 18 மற்றும் 20 வயதுடைய இரு இளைஞர்களே உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்த இருவரும் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிள்களை செலுத்தியவர்களின் அவதானக் குறைவே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 06 திங்கட்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 23
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 11.56 - 01.26
திதி : திரயோதசி




**மேடம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உடல் அசதி சோர்வு வந்து நீங்கும்.

**இடபம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**மிதுனம்**
அனுபவப் பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
உங்களை யாரும் கண்டு கொள்வதில்லை யாரும் முக்கியத்துவம் தருவதில்லை என்றெல்லாம் சில நேரங்களில் புலம்புவீர்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**கன்னி**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உங்களை நம்பி சில பொறுப்புகளை ஒப்படைப்பர்.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**விருட்சிகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து செல்லும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**மகரம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். அரசால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.

**கும்பம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நவீன சாத னங்கள் வாங்குவீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் செல்வதால் வேலைச் சுமை இருந்துகொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். கணுக்கால் வலிக்கும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது தவிப்பீர்கள்.

# தமிழக காவல்துறையின் இணையத்தளம் முடக்கம்

## சைபர் பிரிவு தீவிர விசாரணை

சென்னை, மே 06

தமிழக காவல்துறையின் இணையத்தளம் முடக்கப்பட்டு, கடவுச்சொல் திருடப்பட்டிருப்பது குறித்து சைபர் கிரைம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு பொலிஸார் குற்றவாளிகளின் தரவுகள் மற்றும் முறைப்பாடுகள் குறித்த தரவுகளை சேமித்து வைக்க என ஒவ்வொன்றுக்கும் தனியாக மென்பொருள்களை கையாளுகின்றனர்.

அந்த வகையில், குற்றவாளிகள், காணாமல் போனவர்கள், சந்தேகத்துக்குரிய நபர்களின் தரவுகள் அனைத்தும் தமிழக காவல் துறையால் இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப் படுகிறது.

இந்த முக அடையாளம் காணும் மென்பொருளானது, ஒரு தனிநபரின் புகைப்படத்தை காவல் நிலையங்களில் சி. சி. டி. என். எஸ்ஸால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தரவுகளோடு ஒப்பிட்டு அடையாளம் காணப் பயன்படுகிறது. மேலும், இதனை எஃப். ஆர். எஸ். செயலியாகவும், பொலிஸார் தொலைபேசிகளில் பயன்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் இந்த இணையத்தளம் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவியாகவுள்ளது.

இந்நிலையில், தமிழக பொலிஸாரின் முக அடையாளம் காணும் இந்த இணையத் தளம் முடக்கப்பட்டுள்ளது. (எ)

# தமிழகத்தின் மின் தேவை 21,000 மெகாவாற் மின் உற்பத்தியோ 4,332 மெகாவாற் மட்டுமே

## ராமதாஸ் விமர்சனம்

சென்னை, மே 06

"தமிழகத்தில் அதிகபட்ச மின் தேவை 19, 693 மெகா வாட் ஆகும். இதில் தமிழ்நாடு மின்சார சபையின் சொந்த மின் உற்பத்தி வெறும் 4, 332 மெகா வாட் மட்டும் தான். தமிழகத்தின் மொத்த மின் தேவையில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே தமிழக அரசால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதேநிலை நீடித்தால் தமிழகத்தில் மின்வெட்டு தொடர்கதையாகவே இருக்கும்" என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் எச்சரித்துள்ளார்.

"தமிழகத்தில் சென்னை மற்றும் புறநகர மாவட்டங்களைத் தவிர்த்து, மீதமுள்ள மாவட்டங்களில் தொடர்ந்து அறிவிக்கப்படாத மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தின் மின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அதற்கேற்ற வகையில் மக்களுக்கு மின்சாரம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி, கரூர், மயிலாடுதுறை, சேலம், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் தினமும் ஒரு மணி நேரம் முதல் 4 மணி நேரம் வரை அறிவிக்கப்படாத மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாக ராமதாஸ் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ)

# தமிழகத்தில் அசைக்க முடியாத அரசியல் சக்தி ம. தி. மு. க.

சென்னை, மே 06

தமிழக அரசியல் களத்தில் ம. தி. மு. க. அசைக்க முடியாத அரசியல் சக்தி என்பதை நிலை நாட்டுவோம்.- இவ்வாறு ம. தி. மு. க. தொண்டர்களுக்கு அந்த கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ம. தி. மு. க. 31 ஆம் ஆண்டு தொடக்க நாளையொட்டி தொண்டர்களுக்கு பொதுச் செயலாளர் வைகோ எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

1994 மே 6ஆம் திகதி தொடங்கப்பட்ட ம. தி. மு. க. 31 ஆவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. கடந்த 30 ஆண்டுகளாக தமிழக அரசியல் களத்தில் நேர்மையோடும்,



பொதுவாழ்வில் தூய்மையோடும், இலட்சியத்தில் உறுதியோடும் ம. தி. மு. க. தனது இலட்சிய பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தேர்தல் அரசியலையும் தாண்டி தமிழக முன்னேற்றத்துக்காக ம. தி. மு. க. கண்ட களங்கள் ஏராளம். இவற்றையெல்லாம் வரலாறு வரவு வைத்துக் கொண்டேதான் இருக்கும். ஏப்ரல் 19 இல் நடைபெற்ற மக்களவை தேர்தலில் ம. தி. மு. க. திருச்சி மக்களவை தொகுதியில் பெரும்பான்மையான வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றுள்ளது.

அந்த வகையில் ஜூன் 4 ஆம் திகதி கழகத்தின் வெற்றிச் செய்தியை நாம் கேட்கப்போகிறோம். அதேபோல தி. மு. க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளும் போட்டியிட்ட அனைத்து இடங்களிலும் வெற்றிபெறும். இந்நிலையில் ம. தி. மு. கவின் 31 ஆம் ஆண்டு தொடக்க விழா மேலும் நம்பிக்கை வெளிச்சத்தை அளிக்க இருக்கிறது. தமிழக அரசியல் களத்தில் ம. தி. மு. க. அசைக்க முடியாத அரசியல் சக்தி என்பதை நிலை நாட்டுவோம்.- இவ்வாறு வைகோ குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, மே 06

தமிழகத்தில் 7, 8 ஆம் திகதிகளில் ஒரு சில மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இதுதொடர்பில் சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்தவை வருமாறு,

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இன்று இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

7, 8 ஆம் திகதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும். 7 ஆம் திகதி தேனி, திண்டுக்கல், திருப்பூர், கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும், 8 ஆம் திகதி கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், திருப்பூர், விருதுநகர், தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மலை பகுதிகளில் ஒரிரு இடங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 9, 10 திகதிகளில் தமிழகத்தில் ஒரிரு இடங்களில் முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் இன்று சூறாவளிக் காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீற்றர் வேகத்திலும், இடையிடையே 65 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசித்திபெற்ற திருக்கேதீச்சர ஆலய கொடிச்சீலைக்கு காளாஞ்சி வழங்கல்!

யாழ்ப்பாணம், மே 06

வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும் பாடல் பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தின் கொடிச்சீலை காளாஞ்சி வழங்கல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பாரம்பரியமாக கொடிச் சீலையை வடிவமைப்பவர்களான திருநெல்வேலி, கென்னடி வீதியிலுள்ள சண்முகநாதன் கபிலன் குடும்பத்தினரிடம் ஆலய பரிபாலன சபையினரால் காளாஞ்சி கையளிக்கப்பட்டது. அத்துடன், பெருந்திருவிழாவுக்கான விஞ்ஞாபனமும் கையளிக்கப்பட்டது.



திருக்கேதீஸ்வரம் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தாய் மர்ம மரணம்; 16 வயது மகன் மாயம்

யாழ்ப்பாணம், மே 06

**மர்மமாக உயிரிழந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. இதேநேரம், அவரின் 16 வயதான மனநலம் பாதிக்கப்பட்ட மகனையும் காணவில்லை என்று தெரியவந்துள்ளது.**

**தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

கணவன் வெளிநாட்டில் வசிக்கும் நிலையில் மனைவியும், இரண்டு பிள்ளைகளும் தெல்லிப்பழையில் வசித்து வந்தனர். 16 வயதான மகன் மனநல சிக்கலுக்கு உள்ளானவர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், சிறுவன் தனது கழுத்தில் கத்தி ஒன்றை வைத்திருந்தார் என்றும் இதை அவதானித்த அவரின் சகோதரி அயல் வீட்டில் சென்று உறங்கினார் என்றும் காலையில் வீட்டுக்கு திரும்பியபோது வீட்டில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என்றும் கூறியுள்ளார்.

எனினும், தாயாரின் உடலில் இரத்தக் காயங்கள் எதுவும் இல்லை என்றும் அவரின் வாயிலிருந்து குருதி வெளியேறி காணப்பட்டதாகவும் உடலின் அருகே தற்கொலை செய்வதாக எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, வீட்டு சுவரில் இரத்தத்தால் சில வாசகங்களும் எழுதப்பட்டிருந்தன.

இதேநேரம், வீட்டிலிருந்த மனநலம் பாதிக்கப்பட்ட சிறுவனையும் காணவில்லை என்று கூறப்படுகின்றது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 'யோகம்' சஞ்சிகை வெளியீடு!

யாழ்ப்பாணம், மே 06

முத்தமிழ் சங்கத்தின் "யோகம்" சஞ்சிகை வெளியீட்டு விழாவும் கலைஞர் கௌரவிப்பும் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க. துஷ்யந்தன் தலைமையில் நிகழ்வில்

தொடர்ந்து யோகம் சஞ்சிகை வெளியீட்டு வைக்கப்பட்டதுடன் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். முதற் பிரதியை யாழ். பல்கலைக்கழக புவியல் துறை சிரேஷ் விரிவுரையாளர் கலாநிதி ந. பிரதீபராஜா பெற்றுக்கொண்டார்.

முத்தமிழ் சங்க தலைவர் கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன், முத்தமிழ் சங்க பொருளாளர் பி.கார்த்திகா, பாடசாலை மாணவர்கள், முத்தமிழ் சங்க உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# சபாரத்தினம் நினைவேந்தல் கோண்டாவிலில் அனுஷ்டிப்பு!



யாழ்ப்பாணம், மே 06

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் 38ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கோண்டாவிலில் அவர் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்தில் இடம்பெற்ற நினைவேந்தலில் சபாரத்தினத்தின் திருவுருவப் படத்துக்கு பொதுச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து நினைவஞ்சலி முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், ரெலோ இயக்கத்தின் உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், தியாகராஜ் நிரோஷ், துரைராசா ஈசன் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.


# இரத்தம் சிந்தும் மாதாவின் சிலை!

வடமராட்சி, மே 06

வடமராட்சி கிழக்கு - மணல்காடு இறை இரக்க ஆலயத்தில் மாதாவின் சிலையிலிருந்து இரத்தம் வடிவதாகக் கூறி அதனை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

நேற்று அதிகாலை 5:30 மணியிலிருந்து மாதாவின் சிலையிலிருந்து இரத்தம் வடிந்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சியின் பல்வேறு இடங்களிலும் இருந்தும் பெருந்திரளான மக்கள் இந்தக் காட்சியை பார்வையிட்டு வருகின்றனர். (ஐ)



# நெடுந்தீவிலிருந்து கடத்திய 10 மாடுகள் மீட்கப்பட்டன!

யாழ்ப்பாணம், மே 06

நெடுந்தீவில் இருந்து சட்டவிரோதமான முறையில் மாடுகளை கடத்தி வந்த லொறியை நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் பொலிஸார் கைப்பற்றினர். அத்துடன், அதிலிருந்த10 மாடுகளையும் மீட்டனர்.

நெடுந்தீவிலிருந்து மாடுகள் சட்டவிரோதமாகக் கடத்தப்படுகின்றன என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிசாந்தவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த மாடுகள் கைப்பற்றப்பட்டன.

சந்தேகத்தின் அடிப்படையில் 36 வயது நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் மூலம் படகிலும், அங்கிருந்து லொறி மூலமும் மாடுகளை கொண்டு வந்ததாகத் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# சட்டவிரோத கொல்களம் யாழில் சுற்றிவளைப்பு!

யாழ்ப்பாணம், மே 06

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத கொல்களம் ஒன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு 21 மாடுகள், 4 ஆடுகளும் உயிருடன் மீட்கப்பட்டன. அத்துடன், ஒரு தொகை இறைச்சியும் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பிரபல முஸ்லிம் பாடசாலை ஒன்றின் அருகிலேயே இந்தக் கொல்களம் பிடிபட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கொல்களம் பிடிபட்டது. கொல்களத்தில் விலங்குகளை இறைச்சியாக்கப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களும் மீட்கப்பட்டன. அத்துடன், சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் ஆடு, மாடுகள் கடத்தப்படுகின்றன என்று அண்மைக்காலமாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த நிலையில் மீட்கப்பட்ட ஆடுகள், மாடுகள் களவாடப்பட்டவையா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் ஆரம்பமானது



யாழ்ப்பாணம், மே 06

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று கைதடியில் முன்னெடுக்கப்பட்டது.

இறுதிப் போரின்போது, முள்ளிவாய்க்காலில் சிக்குண்ட மக்களின் உணவாக உப்பு இல்லாத கஞ்சியே இருந்தது. முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் குறியீடாக இந்தக் கஞ்சி வழங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எதிர்வரும் 18ஆம் திகதி நினைவுகூரப்படவுள்ளது. இந்த நிலையில், முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலை ஆரம்பித்துள்ளது.

இனிமேல் இவ்வாறான அவலம் ஏற்படக்கூடாது என்பதை நினைவிருத்தும் விதமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வந்த சீனக் குழு இரகசிய கருத்துக்கணிப்பு?

கொழும்பு, மே 06

**சீன துணை அமைச்சர் தலைமையிலான குழுவினர் பியகம தேர்தல் தொகுதியில் நேரடியாக கருத்துக் கணிப்பை நடத்தினர் என்று தெரியவந்துள்ளது.**

உத்தியோகபூர்வ பயணமாக கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இலங்கையை வந்தடைந்த சீன துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழு உத்தேச ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்பதை நேரடியாக கண்டறியும் நோக்கில் இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இந்த கருத்துக்கணிப்பின் தரவுகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான விசேட சந்திப்பின்போது சீன துணை அமைச்சர் சன் ஹையன் தெரியப்படுத்தியுள்ளார்.

அரசியல் நிலவரங்கள் மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்பன தொடர்பில் கொழும்பில் அமைந்துள்ள சீன இராஜதந்திர மையம் ஆய்வு அறிக்கைகளை ஏற்கனவே பீஜிங்குக்கு அனுப்பியிருந்தது. இவற்றை முழுமையாக அவதானத்த பின்னரே சீன துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழுவினர் கொழும்பு வந்தனர். ஆனால், ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்த தகவல்களை நேரடியாக உறுதிப்படுத்திக்கொள்ள தீர்மானித்திருந்தனர்.

இதன்படி, கருத்து கணிப்பு ஒன்றை அவர்கள் நடத்தினர். இந்தக் கருத்துக் கணிப்பு மிக இரகசியமாக கம்பஹா - பியகம தேர்தல் தொகுதியில் நடத்தப்பட்டது.

இதன் பின்னர் நடந்த சஜித் தரப்புடனான சந்திப்பில் கருத்துக் கணிப்பு தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஐ)

## வெளிநாட்டு சிகரெட்களுடன் சந்தேகநபர் புத்தளத்தில் கைது

சிலாபம், மே 06

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக வெளிநாட்டு சிகரெட்களை கடத்திய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பாலாவி பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 4 பொதிகளில் 40 பெட்டிகள் கொண்ட 800 சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த சம்பவத்தில், புத்தளம் - தில்லையடியை சேர்ந்த நபரே கைது செய்யப்பட்டார்.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, மே 06

சொகுசு காரில் பயணித்தவரை இலக்குவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

களுத்துறை - ஹொரண பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், படுகாயமடைந்தவர் வட்டிக்கு கடன் வழங்குபவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று அறியவருகின்றது. (ஐ)

## பெண் கடத்தப்பட்டு வன்புணர்வு; மூன்று சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மே 06

27 வயதான இளம் குடும்பப் பெண்ணை கடத்திச் சென்று வன்புணர்ந்த பிரதான சந்தேக நபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காலி - உடுகம பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான மூவரும் பெண்ணின் வீட்டுக்கு சென்று அவரின் தாயாரை கட்டிவைத்துவிட்டு, பெண்ணை காரில் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர் என்று பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 58 வயதுடைய பிரதான சந்தேகநபர் செல்ல கதிர்காமம் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். இவர் ரயில் ஓட்டுநராவார்.

அவருடன் வந்த ஏனைய இரு சந்தேக நபர்களும் காலி குருந்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

பாதிப்புக்கு உள்ளான பெண் ஒரு பிள்ளையின் தாய் என்பதுடன் கணவரை பிரிந்து வாழ்கிறார் என்றும் தெரிய வந்தது. (ஐ)

## அரிசி வழங்கவில்லையென கிராம அதிகாரிமீது தாக்குதல்

கொழும்பு, மே 06

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அரிசியை விநியோகிக்க மறுத்த பெண் கிராம உத்தியோகத்தர் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

களுத்துறை - பாணந்துறையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அரசாங்கம் வழங்கிய அரிசியை தனக்கு வழங்கவில்லை என்று கூறியே சந்தேகநபர் கிராம அதிகாரியை தாக்கியுள்ளார் என்று தெரியவருகின்றது.

தாக்குதல் நடத்திய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## அதிவேக வீதியில் கொங்கிறீட் தூண் இடிந்தது

கொழும்பு, மே 06

கொழும்பு - கண்டி அதிவேக நெடுஞ்சாலைக்கு இடையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீதியில் கொங்கிறீட் தூண் ஒன்று நேற்று முன்தினம் இடிந்து விழுந்ததாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த அதிவேக நெடுஞ்சாலையில் நிர்மாண பணிகள் நடைபெற்று வரும் நிலையிலேயே இந்தக் கொங்கிறீட் தூண் இடிந்து விழுந்துள்ளது. (ஐ)

## படையை விட்டு ஓடிய 9,000 பேர் பணி நீக்கம்!

கொழும்பு, மே 06

இராணுவத்தை விட்டு தப்பியோடிய 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பொது மன்னிப்பின் கீழ் பணிநீக்கம் செய்யப்பட்டனர் என்று இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 20ஆம் திகதி வரை படையை விட்டோடிய இராணுவத்தினருக்கு எதிர்வரும் 20ஆம் திகதி வரை இரு வாரங்கள் பொது மன்னிப்பு அறிவிக்கப்பட்டது.

பொது மன்னிப்பு காலத்தில் 9 ஆயிரத்து 770 பேர் இராணுவத்திலிருந்து விலகினர். மேலும், 9 ஆயிரத்து 735 தப்பியோடினர்.

இதேவேளை, விடுமுறை கோராது பணிக்கு திரும்பாத வெளிநாட்டிலுள்ள 35 இராணுவத்தினரும் பணியிலிருந்து நீக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பழமைமிக்க போகம்பரை சிறை நட்சத்திர விடுதியாக மாறுகிறது!

அமைச்சர் பிரசன்ன தகவல்



கொழும்பு, மே 06

கண்டி - போகம்பரை சிறைச்சாலை நட்சத்திர விடுதியாக மாற்றப்படும். இதன் பழமையை அப்படியே பேணிப் பாதுகாத்து நட்சத்திர விடுதியாக மாற்ற முதலீட்டாளர் ஒருவர் முன்வந்துள்ளார் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

போகம்பரை சிறைச்சாலை 2014ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. இந்த அதிகார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலையின் பிரதான கட்டடம் காலனித்துவ கட்டடக் கலையை பாதுகாத்து அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதோடு, பொது மக்களுக்கு திறந்த மற்றும் பொழுதுபோக்கு வசதிகளுடன் வளாகத்தின் பொருளாதார மதிப்பை அதிகரிப்பதே இந்த திட்டத்தின் நோக்கம் என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் மத்திய மாகாண பணிப்பாளர் இ.எம்.எஸ்.பி. ஏகநாயக்க தெரிவித்தார்.

தற்போதும் சிறைச் சுவர் மற்றும் பிரதான கட்டடம் தவிர மற்ற பகுதிகளின் அபிவிருத்திக்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சிறைச்சாலை மருத்துவமனை கட்டடத்தின் சீரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன.

2018ஆம் ஆண்டு வரை நகர அபிவிருத்தி அதிகார சபையானது சிறைச்சாலையின் முன்பகுதியை நன்கு பாதுகாக்கப்பட்ட பழைய கட்டடத்துடன் கூடிய பூங்காவாக உருவாக்கியது.

சிறைச்சாலையின் பிரதான வர்த்தகத் தொகுதி, உணவுக் கூடம், அருங்காட்சியகம் மற்றும் சுற்றுலா ஹோட்டல் உள்ளிட்ட வர்த்தகக் கட்டடமாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

போகம்பரை சிறைச்சாலை வளாகத்தின் கட்டடக்கலை மற்றும் வரலாற்று விழுமியங்களை பாதுகாத்து, அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

இதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையும் இலங்கை முதலீட்டு சபையும் இணைந்து தனியார் முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்துள்ளன. இது தவிர முதலீட்டாளர் தெரிவு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருவதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

போகம்பரை சிறைச்சாலை 138 வருடங்களாக செயல்பட்டு வந்துள்ளது. 2014ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி மூடப்பட்டு அதன் செயல்பாடுகள் பல்லேகலையில் உள்ள புதிய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டது.

போகம்பரை சிறைச்சாலை தற்போது பொதுமக்களின் பார்வைக்காக மட்டுமே திறக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கடல் அலை இழுத்துச் சென்ற இளைஞர்களில் ஒருவர் மரணம்!

கொழும்பு, மே 06

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்திருந்த எச்சரிக்கையையும் மீறி கடலில் நீராடிய 3 இளைஞர்கள் கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்டனர். இதில், இருவர் காப்பாற்றப்பட ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாத்தறை - வெலிகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் அப்துல் பாஷித் என்ற 20 வயது இளைஞரே உயிரிழந்தார்.

இளைஞருடன் கடல் அலை இழுத்துச் சென்ற இருவரும் காப்பாற்றப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம், இன்று திங்கட்கிழமை வரை கரையோரத்தில் அலையின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் கடலில் நீராடுவதைத் தவிர்க்குமாறு ஏற்கனவே வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை சிறையில் அடைக்க ஆளும் தரப்பினர் சதிமுயற்சி

## மைத்திரிபால சிறிசேன சாடல்



கொழும்பு, மே 06

"என் அரசியல் பயணம் ஆளும் தரப்பினருக்குப் பிடிக்க வில்லை. அதனால் அவர்கள் என்னைச் சிறையில் அடைக்க சகல வழிகளிலும் முயல்கின்றனர். சிறையில் அடைக்கும் அளவுக்கு நான் குற்றம் எதுவும் செய்ய வில்லை."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் உண்மைத் தகவல்கள் வெளியானால் தங்கள் அரசியலுக்கு வேட்டு வைக்கப்படும் என்று ஆளும் தரப்பினரான மொட்டுக் கட்சியினர் எண்ணுகின்றனர். அதனால் அவர்கள் எனது அரசியல் பயணத்தை முடக்க முயல்கின்றனர்.

என் அரசியல் பயணத்தை எவராலும் தடுக்க முடியாது. நெருக்கடி நிலைமையிலிருந்து சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை விரைவில் மீட்டெடுப்பேன். சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஆட்சி மலரும் காலம் வெகுதொலைவில் இல்லை."

- என்றார். (ஐ)

# மயங்கிய நிலையில் மூதாட்டி மீட்பு; மகன் குடும்பத்தை காணவில்லை!

கொழும்பு, மே 06

மூடப்பட்ட வீட்டுக்குள் 80 வயது மூதாட்டி ஒருவர் மயங்கிய நிலையில் நேற்று அதிகாலை மீட்கப்பட்டார். இதே நேரம், அவருடன் வசித்து வந்த மகன் குடும்பம் காணாமல் போயுள்ளது என்று தெரிய வந்துள்ளது.

கம்பஹா - மீரிகம பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பொலிஸ் அவசர உதவி பிரிவுக்கு பிரதேச வாசிகள் அளித்த தகவலின் அடிப்படையில் மூடப்பட்டிருந்த வீட்டை உடைத்து பொலிஸார் நுழைந்தனர்.

அங்கு சேமிப்பு அறையில் கட்டிலின் கீழே மயங்கிய நிலையில் கிடந்த மூதாட்டியை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

குறித்த மூதாட்டி தனது மகன் மற்றும் அவரின் குடும்பத்துடன் அந்த வீட்டில் வசித்து வந்துள்ளார். கடந்த 5 நாட்களாக மகனின் குடும்பம் காணாமல் போயுள்ளது. இது தொடர்பில், பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

மூடப்பட்டிருந்த வீட்டை உடைத்து நுழைந்த பொலிஸார் மூதாட்டியை மீட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 5 இலட்சம் ரூபாய் அபராதம் வீதி அனுமதியற்ற பஸ்களுக்கு

கொழும்பு, மே 06

வீதி அனுமதிப்பத்திரம் இன்றி பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளுக்கான அபராதத் தொகையை ஐந்து இலட்சம் ரூபாயாக அதிகரிக்க தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

3,200 தொலைதூர சேவை பேருந்துகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஒழுங்கு முறையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பயணிகள் பெரும்பாலும் வீதி அனுமதிப்பத்திரம் இல்லாத பேருந்துகளில் ஏற்றிச் செல்லப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, வெள்ளவத்தை மற்றும் மருதானையை அண்மித்த பகுதிகளில் வீதி அனுமதிப்பத்திரம் இல்லாத பேருந்துகள் நிறுத்தப்பட்டு சட்டவிரோதமான முறையில் பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. இந்தப் பேருந்துகளை கண்டறிந்து வழக்குத் தொடர தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ)

# பிணைமுறி உரித்தாளர்களுடனான பேச்சில் வெகுவிரைவில் இணக்கம் எட்டப்படும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, மே 06

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச பிணைமுறி உரித்தாளர்கள் குழுவினருடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுகளில் வெகுவிரைவில் இணக்கப்பாடு எட்டப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கும், சர்வதேச பிணைமுறி உரித்தாளர்கள் மற்றும் அவர்களின் ஆலோசகர்களுக்கும் இடையேயான கடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சுகள் அண்மையில் லண்டனில் நடைபெற்றன.

இதன்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுடன் தொடர்புடைய பிணைமுறிகளை மறுசீரமைப்பது குறித்து பொது இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் பிணைமுறி உரித்தாளர்களும் தீர்மானமொன்றுக்கு வருவதற்கு காத்திருப்பது குறித்து தாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இறுதிக்கட்ட இணக்கப்பாட்டை எட்டுவதில் அவர்கள் ஆர்வம் காண்பித்துள்ளனர். இவ்விடயத்தில் சில காரணிகள் தொடர்பில் கலந்துரையாட வேண்டி யுள்ளது. சர்வதேச பிணைமுறி உரித்தாளர்களுடனான இரண்டாம் சுற்றுப் பேச்சுகள் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு உதவும் என நாம் நம்புகின்றோம்.

அதுமாத்திரமன்றி இரு தரப்பு கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான இறுதி இணக்கப்பாட்டை எட்டுவதை முன்னிறுத்தி தாம் பணியாற்றி வருகிறார் என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார். (ஐ)

# தேசிய அரசாங்கம் அமைப்பதே நாட்டின் நன்மைக்கு வழிவகுக்கும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் கபீர் எம். பி.



கொழும்பு, மே 06

கட்சி அரசியலுக்கு அப்பால் தேசிய அரசாங்கம் அமைக்கப்படுமானால் அது நாட்டின் நன்மைக்கு வழிவகுக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

ஆனால், தேர்தல்கள் நடத்தாமல் ஒரு பொது நோக்கத்திற்காக அரசியல் கட்சிகள் இதற்கு ஒத்துக்கொள்ளுமா என்ற கேள்வி எழுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேசிய அபிலாசைகளுக்காக ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மே தின உரையில் அனைத்துக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தமை தொடர்பில் செய்தியாளர்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "ஜனாதிபதியின் அழைப்பு குறித்த உத்தியோகபூர்வ கருத்தை கட்சித் தலைவர்களுடனான உள்ளக கலந்துரையாடலின் பின்னரே தெரிவிக்க முடியும்.

எவ்வாறாயினும், நாடு இன்று கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. மக்கள் இன்னும் ஐந்து வருடங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறிய தருணத்தில் உண்மையான தேசிய அரசாங்கமொன்றை அமைத்திருக்க முடியும். என்றாலும், அந்த சந்தர்ப்பம் பறிபோய்விட்டது." என்றும் கபீர் ஹாசிம் சுட்டிக் காட்டினார்.

சில அதிருப்திகள் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின நிகழ்வில் கபீர் ஹாசிம் கலந்துகொள்ளவில்லையென தகவல்கள் வெளியாகியிருந்த பின்புலத்திலேயே கபீர் ஹாசிம், தேசிய அரசாங்கத்துக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார். (ஐ)

# இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறுவன் குத்திப் படுகொலை!

கொழும்பு, மே 06

இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற 17 வயது சிறுவன் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை களுத்துறை - பாணந்துறையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவரிடையே ஏற்பட்ட வாக்குவாதமே இந்தக் கொலைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. இதில், பாணந்துறை, பரத்த வீதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனே உயிரிழந்தார்.

சிறுவனை கொன்றார் என்று கருதப்படும் இளைஞரை பொலிஸார் கத்தியுடன் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

# 1.5 இலட்சம் சுற்றுலாவிகள் ஏப்ரலில் இலங்கை வந்தனர்!

கொழும்பு, மே 06

கடந்த மாதத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 867 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விவரம் தெரிய வந்துள்ளது.

இந்தியாவில் இருந்து வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என்றும் கூறப்பட்டது.

இதன்படி, இந்தியாவில் இருந்து 27 ஆயிரத்து 304 பேரும், ரஷ்யாவில் இருந்து 15 ஆயிரத்து 103 பேரும், ஜேர்மனியில் இருந்து 13 ஆயிரத்து 173 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (ஐ)

# தியத்தலாவை பந்தய விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு

கொழும்பு, மே 06

தியத்தலாவை கார் பந்தயத்தில் உயிரிழந்த 7 பேரின் குடும்பங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாயும் காயமடைந்தவர்களுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் நட்டஈடாக வழங்கப்படும் என்று விளையாட்டுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

பதுளை - தியத்தலாவையில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி கார் பந்தயம் நடைபெற்றது. இதன் போது, கார் ஒன்று பாதையை விட்டு விலகி பார்வையாளர் பகுதிக்குள் நுழைந்தது. இதில், 7 பேர் உயிரிழந்தனர். 22 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் நேரடியாக தமிழ்த் தேசிய எம். பிக்களுடன் பேச வேண்டும்

## சொல்கிறார் கருணாகரம் எம். பி.


மட்டக்களப்பு, மே 05

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயாராக இருக்கிறார் என்றால் அதனை அவர், மனோ கணேசன் ஊடாக சொல்லக்கூடாது. தமிழ் தேசிய கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளை அழைத்து அவர் கூற வேண்டும்.**

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் அமரர் சிறீ சபாரத்தினம் அவர்களின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பில் நடந்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "நாங்கள் ஒன்றுபட வேண்டும். ஒருவர் வாக்குறுதி அளித்தால் உண்மையாக அளிக்கவேண்டும். பொது வேட்பாளரை நிறுத்துவதா? என்பதை நாங்கள் ஒன்றாக முடி வெடுக்க வேண்டும் - என்றார். (ஐ)



# அட்டாளைச்சேனை - சம்புகளப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டது

அக்கரைப்பற்று, மே 05

அட்டாளைச்சேனை - சம்புகளப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கும் வேலைத் திட்டம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம். ஐ. எம். பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏ. எல். எம். அதாஉல்லஹ் எம். பி. பிரதம விருந்தினராகப் பங் கேற்றார்.

அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நீண்ட கால தேவையாகவிருந்து இந்த வீதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டமைக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தனர். (ஐ)

# ஏறாவூர் ஆடை தொழில் முதலீட்டு வலய பணிகள் குறித்து ஆராய்வு!

மட்டக்களப்பு, மே 06

மட்டக்களப்பு மாவட்டம் - ஏறாவூர் புன்னைக்குடா கடற்கரையோரமாக அமையவிருக்கும் ஆடை தொழில் முதலீட்டு வலய அபிவிருத்தி பணிகளின் முன்னேற்றம் குறித்து வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் இந்திய முதலீட்டாளர்களுடன் சென்று பார்வையிட்டார்.

ஆளுநரும் முதலீட்டாளர்களும் சுமார் 400 ஏக்கர் நிலப் பரப்பில் அமையவிருக்கும் முதலீட்டு வலயத்தின் அபிவிருத்தி பணிகள் குறித்து நேரில் சென்று ஆராய்ந்தனர்.

ஏறாவூரில் ஆடை கைத் தொழில் முதலீட்டு வலயம் அமைப்பதற்கு கடந்த கடந்த



2020 ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானம் எட்டப்பட்டது. இது கிழக்கு மாகாணத்தில் துணி உற்பத்தி தொடர்பான தொழில் முயற்சிக்கென அமையவிருக்கும் விசேட, பிரமாண்ட கைத்தொழில் வலயமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தென்கிழக்கு பல்கலையில் 28 ஏக்கரில் மூலிகை தோட்டம்

அக்கரைப்பற்று, மே 06

தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான சம்மாந்துறை - மல்வத் தையில் அமைந்துள்ள 28 ஏக்கர் காணியில் ஆயுள்வேத மூலிகைத் தோட்டம் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர ஐ. எல். எம். றிபாஸ் தெரிவித்தார்.

மாகாண ஆயுள்வேத மூலிகை உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் மீள் உற்பத்தி திட்டத்தின் கீழ் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படவுள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் ஏற்பாட்டில் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், இந்திய ஆயுள்வேத வைத்திய நிபுணர்களுடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொலிஸ் அதிகாரிமீது சிப்பாய் தாக்குதல்!

அம்பாறை,மே 06

படை சிப்பாயின் மனைவியுடன் உறவில் இருந்தார் என்று கூறப்படும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தாக்கப்பட்டார்.

படை சிப்பாயே இந்தத் தாக்குதலை நடத்தினார் என்று கூறப்படுகின்றது.

அம்பாறை - பதியத்தலாவை பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. படை சிப்பாயின் வீட்டுக்கு பொலிஸ் அதிகாரி வந்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலை நடத்திய சிப்பாய் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். (ஐ)

# உப்பு ஆற்றிலிருந்து மண்டை ஓடு மீட்பு!

மட்டக்களப்பு, மே 06

சத்துருக்கொண்டான் கண்ணகி அம்மன் ஆலயத்தின் பின்புறமுள்ள உப்பு ஆற்றில் இனந்தெரியாத ஆணின் மண்டையோடு எலும்புகள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன.

நேற்று பகல் இந்த ஆற்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் மண்டையோடு இரண்டு எலும்புகள் சிக்கின.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. அங்கு வந்த தடயவியல் பொலிஸார் நடத்திய ஆய்வில், அந்த மண்டை ஓடு 40 வயதுக்கு உட்பட்ட ஆண் ஒருவருடையது என்று கூறப்பட்டது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் தர்சினி குறித்த இடத்துக்கு சென்று மண்டையோடு மற்றும் எலும்புகளை பார்வையிட்டார்.

பின்னர், அவற்றை பகுப்பாய்வுக்கு உட்படுத்த



பணித்தார். இதன்பிகராரம் அந்த எலும்புக்கூடுகள் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஆலயங்களில் திருடிய நால்வருக்கு மறியல்!

மட்டக்களப்பு, மே 06

மட்டக்களப்பு நகரில் ஆலயங்களின் கதவை உடைத்து நுழைந்து குத்துவிளக்கு மற்றும் பொருட்களை திருடி வந்த மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தத் திருட்டுகள் தொடர்பில் ஏற்கனவே இருவர் கைதான நிலையில், அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே மற்ற இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதான நால்வரும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# காத்தான்குடியில் அல் குர்ஆன் விழா 35ஆவது ஆண்டாக சிறப்புற நடந்தது

மட்டக்களப்பு, மே 06

காத்தான்குடி குர்ஆன் மதரசாக்கள் அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று 35ஆவது வருட அல் குர்ஆன் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் 2023ஆம் ஆண்டு புனித அல் குர்ஆனை ஓதி முடித்து பரீட்சையில் சித்தியடைந்த ஆயிரத்து 20 மாணவர்கள் சான்றிதழ்கள், விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

காத்தான்குடி குர்ஆன் மதரசாக்கள் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் மௌலவி இக்பாலின் ஒழுங்கமைப்பில் பிரதி தலைவர் மௌலவி அல் ஹாபிழ் எச்.எம். ஸாஜஹான் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ஒ.எல்.அமீர் அஜ்வத் நழீமி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (ஐ)



# வீதிகளில் விளையாடுபவர்களால் பயணிப்பவர்களுக்கு சிரமங்கள்!

கல்முனை, மே 06

கல்முனையில் வீதிகளில் கிரிக்கெட், உதைபந்தாட்டத்தில் ஈடுபடுபவர்களால் வீதிகளில் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

காலை மற்றும் மாலை வேளைகளில் தமது ஓய்வு நேரங்களை, வீதி விளையாட்டுக்களில் கழிக்கும் இளைஞர்களை பொது மைதானத்தை நோக்கி நகர்த்த வேண்டும். இதன்மூலம் வீதிகளில் பயணிப்பவர்கள் சிரமமின்றி செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தோனேஷியாவில் வெள்ளம், நிலச்சரிவு

## 15 பேர் உயிரிழப்பு

ஜகார்த்தா, மே 06

இந்தோனேஷியாவில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு பாதிப்புக்களிலிருந்து தப்பிப்பதற்காக 115 பேர் மீட்கப்பட்டு மசூதிகள் மற்றும் அவர்களுடைய உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.


இந்தோனேஷியாவின் தெற்கே சுலாவெசி மாகாணத்தில் லுவு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கனமழை பெய்தது. இதனால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தொடர்ந்து நிலச்சரிவுகளும் ஏற்பட்டன. இதில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர்.

100 வீடுகள் சேதமடைந்தன. 42 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். 4 வீதிகளும், ஒரு பாலமும் சேதமடைந்தன.

சில பகுதிகளில் காடுகள் அழிப்பு மற்றும் நீண்டநேரம் மழைப்பொழிவு போன்றவற்றால் நிலைமை மோசமடைந்துள்ளது.

கடந்த மாதம், மவுண்ட் ருவாங் எரிமலை சீற்றம் ஏற்பட்டதும், பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லும் உத்தரவை மக்களுக்கு பிறப்பிக்க வேண்டிய நிலை அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. இதனால், வானில் 2 கிலோ மீற்றர் உயரத்துக்கு எரிமலை சாம்பல், புகை உள்ளிட்டவை பறந்தது. கடந்த மார்ச்சில் சுமாத்ரா தீவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவு பாதிப்புக்களில் சிக்கி 30 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# வெளுத்து வாங்கும் கனமழை பிரேசிலில் 40 பேர் உயிரிழப்பு



சாவ் பாலோ, மே 06

தென் அமெரிக்க நாடான பிரேசிலின் ரியோ கிராண்டே டோ சுல் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளப்பெருக்கு காரணமாக அங்கு ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. மேலும் வெள்ளப் பெருக்கில் அடித்துச்செல்லப்பட்டு 30 பேர் பலியாகினர்.

இந்நிலையில் கனமழையால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை தற்போது 40 ஆக உயர்ந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் 70 பேர் நிலை என்ன? என்று தெரியவில்லை. அவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் சுமார் 5 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 1. 4 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட போர்டோ அலெக்ரே நகரத்துக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆர்ஜென்டினா மற்றும் உருகுவே நாட்டின் எல்லையில் அமைந்துள்ள பல நகரங்களுக்கு அங்கு அவசர நிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஹர்தீப் சிங் கொலை வழக்கில் கனடாவில் 3 இந்தியர்கள் கைது!

ரொறன்டோ, மே 06

காலிஸ்தான் அமைப்பின் ஹர்தீப் சிங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 3 இந்தியர்கள் மீது கொலை மற்றும் சதித்திட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசால் தேடப்பட்டு ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சர்ரேயிலுள்ள குருத்வாராவுக்கு வெளியே சுட்டுக் கொல்லப்பட்டார். கனடா நாட்டு குடிமகனான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்திய முகவர்களுக்கு தொடர்பு உள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனால் இந்தியா - கனடா உறவு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. கனடாவின் குற்றச்சாட்டை இந்தியா நிராகரித்தது.

இந்த பரபரப்பான சூழ் நிலையில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை தொடர்பில் கரன் பிரார் (வயது - 22), கமல் ப்ரீத் சிங் (வயது - 22) கரன் ப்ரீத் சிங் (வயது -28) ஆகிய மூன்று இந்தியர்களை கனடா பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் மீது கொலை மற்றும் சதித்திட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கைது நடவடிக்கை குறித்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறுகையில்,



"இது முக்கியமான விடயம். ஏனென்றால் கனடா வலுவான மற்றும் சுதந்திரமான நீதி அமைப்பைக் கொண்ட ஒரு சட்டத்தின் ஆட்சி நடக்கும் ஒரு நாடு. நாட்டின் அனைத்து குடிமக்களையும் பாதுகாப்பதற்கான அடிப்படை அர்ப்பணிப்பு கொண்டுள்ள நாடு" - என்றார். (எ)

# இது கனடாவின் உள்நாட்டு அரசியல் இந்தியர்கள் கைது குறித்து இந்தியா

டில்லி, மே 06

கனடாவில் ஆளுங்கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்றும், சில கட்சிகள் காலிஸ்தான் சார்பு தலைவர்களை நம்பியிருப்பதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்திய அரசால் தேடப்பட்டு வந்த காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் 3 இந்தியர்களை கனடா பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இந்த மூவரும் அமெரிக்க சட்ட அமுலாக்க முகவர்களுடன் பணிபுரிந்ததாக கனடா தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தவை வருமாறு,

கனடாவில் தற்போது நடக்கும் நிகழ்வுகள் அனைத்தும் தேர்தலை இலக்காக வைத்து முன்னெடுக்கப்படும்



உள்நாட்டு அரசியல். இந்தக் கொலைக்கும் இந்தியாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

காலிஸ்தான் ஆதரவு மக்கள் கனடாவின் ஜனநாயகத்தைப் பயன்படுத்தி ஒரு லாபியை உருவாக்கி வாக்கு வங்கியாக மாறியுள்ளனர். மேலும், கனடாவில் ஆளுங்கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை. சில கட்சிகள் காலிஸ்தான் சார்பு தலைவர்களை நம்பியிருக்கின்றன.

இரு நாடுகளுக்கும், இரு நாட்டு உறவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அத்தகைய நபர்களுக்கு வீசா, சட்டப்பூர்வ அங்கீகாரம் அல்லது அரசியல் இடத்தை வழங்க வேண்டாம் என்று நாங்கள் பலமுறை கனடாவிடம் கூறினோம். ஆனால் கனடா அரசாங்கம் எதையும் செய்யவில்லை. காலிஸ்தான் ஆதரவாளர்கள் உள்ளிட்ட 25 பேரை நாடு கடத்தும்படி இந்தியா கோரிக்கை வைத்தது. அதையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை.

கனடா எந்த ஆதாரத்தையும் தரவில்லை. சில வழக்குகளில் அவர்கள் எங்களிடம் எந்த ஆதாரத்தையும் பகிர்ந்து கொள்வதில்லை. காவல்துறை விசாரணை அமைப்புகளும் எங்களுக்கு ஒத்துழைப்பதில்லை. அரசியல் நிர்ப்பந்தம் காரணமாகவே இந்தியாவை குறை கூறுகிறார்கள். கனடாவில் தேர்தல் வருவதால் வாக்கு வங்கி அரசியலில் ஈடுபடுகிறார்கள். - இவ்வாறு ஜெய்சங்கர் கூறினார். (எ)

# என்னை கொலை செய்ய பாக்.இராணுவம் சதி!

## முன்னாள் பிரதமர் இம்ரான்கான்



இஸ்லாமாபாத், மே 06

என்னைக் கொலை செய்வதுதான் எஞ்சியுள்ளது. எனக்கோ, என் மனைவிக்கோ ஏதேனும் நேர்ந்தால் இராணுவத் தளபதி தான் பொறுப்பு. - இவ்வாறு பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் பல்வேறு ஊழல் வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் இம்ரான்கான் சிறையில் இருந்தபடி இங்கிலாந்து பத்திரிகையில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளமை வருமாறு,

எனக்கு எதிராக இராணுவம் முடிந்த அனைத்தையும் செய்துள்ளது. இப்போது என்னைக் கொலை செய்வதுதான் அவர்களுக்கு மிச்சம். எனக்கோ அல்லது என் மனைவிக்கோ (புஷ்ரா பீபி) ஏதேனும் நேர்ந்தால், இராணுவத் தளபதி அசிம் முனீர் தான் பொறுப்பு என்று நான் பகிரங்கமாகக் கூறுகிறேன். ஆனால், என் நம்பிக்கை பலமாக இருப்பதால் நான் பயப்படவில்லை. அதேசமயம் நான் அடிமைத்தனத்தை விட மரணத்தை விரும்புகிறேன். - இவ்வாறு இம்ரான்கான் குறிப்பிட்டுள்ளார். (எ)

# மக்கள் போராட்டத்தின்மீது இராணுவம் துப்பாக்கி சூடு!

பலூசிஸ்தான், மே 06

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தின் சாமன் பகுதியிலுள்ள பொது மக்கள் தங்களுடைய உரிமைகளை கேட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை நோக்கி பாகிஸ்தானின் துணை இராணுவப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதனால் நால்வர் உயிரிழந்தனர். 21 பேர் காயமடைந்தனர். போராட்டக்காரர்களின் கூடாரங்களுக்குத் தீ வைத்ததுடன் 50 இற்கும் மேற்பட்டோரை கைது செய்து கொண்டு சென்றனர். ஸ்பின் போல்தக் - சாமன் [illegible] தடையை ஏற்படுத்தி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில், இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் ஏற்றுக் கொள்ள முடியாதது என சாமன் போராட்ட இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் மௌலானா [illegible] கூறியுள்ளார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரடைப்பு நோயால் 100சதவீத மரணம் பதிவு

கொழும்பு, மே 06

**மாரடைப்பு நோயால் பாதிக்கப்பட்ட 30 - 50 வயதுக்கு இடைப்பட்டவர்கள் நூறு சதவீதத்தினர் மரணமாகினர். கடந்த மூன்று மாதங்களில் இரத்தினபுரி - பலாங்கொடை பகுதியிலேயே இந்த மரணங்கள் பதிவாகின என்று அந் தப் பகுதியின் மரண விசாரணை அதிகாரி பத்மேந்திர விஜயதிலக தெரிவித்தார்.**

தரவுகளின்படி, மாரடைப் பால் இறக்கும் போக்கு குறிப் பாக இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதினரிடையே அதிகரித்துள்ளது.

மேலும், 30 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு திடீரென வயிற்றில் வீக்கம், மயக்கம், வலிப்பு ஏற்பட்டால் இரத்தப் பரிசோதனை, ஈ. சி. ஜி. பரி சோதனை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

30-50 வயதுக்கு இடைப் பட்ட இளைஞர்களும் நடுத்தர வயதினரும் மேற்குறிப்பிட்ட அவசரகால நிலைமைகளுடன் ஏற்படும் மாரடைப்புகளில் இருந்து தமது உயிரை பாது காத்துக் கொள்வதில் அக்கறை செலுத்த வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஓ. எல். பரீட்சை மீள் திருத்த பெறுபேறுகள் வெளியாகின

கொழும்பு, மே 06

2022ஆம் ஆண்டுக்கான க. பொ. த. சாதாரண தரப் பரீட் சையின் மீள் திருத்த பெறு பேறுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

இதன்படி, பரீட்சை திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளமான www.doenets.lk அல்லது www. results.exams.gov.lk மூலம் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறி விக்கப்பட்டுள்ளது.

மீள் திருத்தத்திற்கு 49 ஆயிரத்து 312 பரீட்சார்த்தி கள் விண்ணப்பித்திருந்தனர். 2 இலட்சத்து 50 ஆயிரத்து 311 விடைத்தாள்கள் மீள் திருத்தத்துக்கு உட்படுத்தப்பட்டன.

இந்நிலையில், மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சைகள் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை இன்றைய தினம் ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஜப்பான் அமைச்சர் சஜித்தை சந்தித்தார்!

கொழும்பு, மே 06

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால திட்டங்கள் குறித்து ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா வுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விளக்கமளித் தார் என்று தெரிவிக்கப்பட் டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா நேற்று முன்தினம் சந்தித்தார்.

இதன்போது, நாட்டின் சமகால அரசியல் குறித்துப் பேசப்பட்டது. அத்துடன், பொருளாதார நெருக்கடி நிலை தொடர்பிலும் உரையாடினர். இதன்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால திட்டங்கள் குறித்தும் அந்தக் கட்சியின் தலைவர் சஜித் ஜப்பான் அமைச்சருக்கு விளக்கமளித் தார். (ஐ)

# போதை வர்த்தகத்தில் புதியவர்கள்; கட்டுப்படுத்துவதில் சிக்கல் நிலை!

கொழும்பு, மே 06

போதைப்பொருள் வர்த்தகத் தில் புதியவர்கள் பலர் இணைந் துள்ளனர். இதனால், போதை வர்த்தகத்தை கட்டுப்படுத்து வதில் சிக்கல் எழுந்துள்ளது என்று பொலிஸ் புலனாய்வு பிரிவு தெரிவித்ததாகக் கூறப் படுகின்றது.

பெருந்தொகை சொத்து களை ஈட்டும் நோக்கிலேயே போதைப் பொருள் கடத்தலில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். போதைப்பொருள் கடத்தல்காரர் கள் பலர் கைது செய்யப்பட்ட நிலையில் அந்த இடத்துக்கு புதியவர்கள் வந்துள்ளனர்.

புதிய கடத்தல்காரர்களை கைது செய்வது இலகுவான காரியமல்ல என விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சமீபகாலமாக இந்த மோச டியில் ஈடுபட்டவர்கள் தொடர் பில் போதைப் பொருள் தடுப் புப் பிரிவினரிடமி எந்தத் தகவ லும் இல்லை. இதனால், அவர் களை சோதனையிடுவதிலும் கைது செய்வதிலும் சிக்கல் காணப்படுகின்றது. எனினும், அண்மையில் கைது செய்யப் பட்டவர்களில் பலர் புதிய கடத் தல்காரர்கள் என்றும் தெரிவிக் கப்பட்டது.

இதேநேரம், போதைப் பொருள் கடத்தலின் முக்கிய புள்ளிகள் பலர் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர் என் றும் சுட்டிக்காட்டப்பட்டது.

## நீரில் மூழ்கி இருவர் பலி!

கொழும்பு, மே 06

நீரில் மூழ்கி இருவர் உயிரி ழந்தனர். வெவ்வேறு இடங் களில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இரத்தினபுரி - நிவித்திகல - ஜயபுரகம பகுதியில் ஆற்றில் தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழந் தார். 31 வயது நபரே உயிரிழந்த வராவார்.

இதேபோன்று நுவரெலியா - ஹங்குரான்கெத்த பகுதியில் ஆற்றில் நீராட சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். 45 வயது நபரே இவ்வாறு உயிரி ழந்தார். (ஐ)

# சங்ககாரவின் சகோதரியின் வீடு தீ விபத்தால் சேதம்!



கொழும்பு, மே 06

இலங்கை கிரிக்கெட் அணி யின் முன்னாள் பிரபல வீரர் குமார் சங்க காரவின் சகோ தரியின் வீடு தீ விபத்தால் சேத மடைந்தது.

கண்டி - தல்வத்தையில் இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

கண்டி மாநகர சபையின் தீயணைப்புத் துறை தீயை அணைத்தது.

தீ விபத்து ஏற்பட்ட போது வீட்டில் எவரும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தீ கட்டுப்படுத்தப்பட்ட போதிலும், இந்த விபத்தால் வீட்டின் மேற்கூரை பெரும் சேதடைந்ததாகத் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# பதுளை மண்சரிவு அபாயத்துக்கு உமா ஓயா திட்டம் காரணமல்ல!

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம்

கொழும்பு, மே 06

பதுளை - கரந்தகொல்லை பகுதியில் ஏற்படும் மண்சரிவு அபாயம் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தால் ஏற் படவில்லை ஆய்வுகளில் தெரிய வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் மண்சரிவு பிரி வின் பணிப்பாளர் கலாநிதி காமினி ஜயசிங்க இந்த விட யத்தைத் தெரிவித்தார்.

எல்லை - கரந்தகொல்லை மற்றும் மலித்தகொல்ல பகுதிகளில் மண்சரிவு அபாயம் அதிகம் காணப்படுகின் றது.

இந்த மண்சரிவு அபாயத் துக்கும் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்துக்கு தொடர்புள்ளதாக கரந்த கொல்லை பிரதேச மக்கள் குற்றம் சுமத்திவந்தனர்.

இந்நிலையில், தேசிய கட் டட ஆராய்ச்சி நிறுவகத்தால் ஆய்வு நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டன.

இதற்கமைய இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களின் அடிப்படையில் குறித்த திட்டத்துக்கும் மண்சரிவுக் கும் தொடர்புள்ளமை உறுதிப் படுத்தப்படவில்லை என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத் தின் மண்சரிவு பிரிவின் பணிப் பாளர் கலாநிதி காமினி ஜய சிங்க மேலும் தெரிவித்தார். (ஐ)

# இலகு ரயில் போக்குவரத்தை மீள ஆரம்பிக்க நடவடிக்கை!

கொழும்பு, மே

இடைநிறுத்தப்பட்டுள்ள கொழும்பு இலகு ரயில் போக்கு வரத்து திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நட வடிக்கை எடுத்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்க ளிடம் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். மேலும்,

இலங்கையின் முக்கிய அபி விருத்தி பங்காளிகளில் ஒருவ ரான ஜப்பான் சர்வதேச ஒத்து ழைப்பு முகவரான "ஜெய்கா" ஊடாக இலங்கைக்கு வழங்கப் பட்ட ஜப்பானிய உத்தியோக பூர்வ அபிவிருத்தி உதவிகளை நாடு வரவேற்கிறது.

கொழும்பு இலகு ரயில் போக்குவரத்து திட்டத்தை மீண் டும் நடைமுறைப்படுத்துவதற் கான முன்மொழிவு நிதி அமைச் சிடம் முன்வைக்கப்பட்டுள் ளது. தேசிய செயல்பாட்டு மையத்தால் அறிக்கை கோரப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்தது

கொழும்பு, மே 06

நாட்டின் நீர்த் தேக்கங்க ளின் நீர் மட்டம் குறைவடைந் துள்ளது.

இதற்கமைய காசல்ரி மற் றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக் கங்களின் நீர் மட்டம் குறை வடைந்துள்ளது.

காசல்ரி நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 44 அடியாக குறைத் துள்ளது.

இதேவேளை - மவுஸாக்கலை நீர்த்தேக்கத் தின் நீர் மட்டம் 49 அடியாக குறைந்துள்ளதாகவும் பொறி யியலாளர்கள் தெரிவித்துள்ள னர்.

கடும் வெப்பம் காரணமாக இவ்வாறு நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பலாலி...

மட்டுமே தற்போது யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவையை முன்னெடுத்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழர்களின்...

தமிழ்த் தேசிய கட்சிகள் சந்தித்தன. இது ஒரு மகிழ்வான தருணமாக அமைந் தது. இந்தக் கூட்டு தமிழ் பொது வேட் பாளர் என்ற அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் எதிர்காலத்தில் இந்தக் கூட்டு ஓர் அரசியல் கூட்டாக - தமிழ் மக்களின் அரசியல் விடுதலையை - தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய - அரசியல் தீர்வை கொண்டு வருவதற்கான கூட்டாக அமையுமாக இருந்தால் உண்மையிலேயே நாங்கள் அனைவரும் சந்தோசப்படக்கூடியதாக இருக்கும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை வந்து 6 ஜனாதிபதிகள் மக்களால் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றார்கள். 6 ஜனாதிபதிகளில் நாங்கள் விரும்பி இரண்டு ஜனாதிபதிகளை கொண்டு வந்திருந்தோம். ஆனால், நாங்கள் வாக்களித்து ஜனாதிபதியாக கொண்டு வரப்பட்டவர்களும் - நாங்கள் விரும்பாத 4 பேரும் இந்த நாட்டை ஆண்டு எங்களுக்கு இதுவரை எதுவுமே செய்யவில்லை - இனப்பிரச்னை தீர்வுக்காகவும் எதுவுமே செய்யவில்லை. அந்த வகையில், இன்னும் இன்னும் நாங்கள் இந்த சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் என்று வாக்களித்து ஏமாறாமல் - எங்கள் ஒற்றுமையை நாங்கள் காட்ட வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது.

ஒற்றுமையை காட்டுவது என்பது சிங்களவர்களை வழிக்குக்கொண்டு வரவேண்டிய ஒரு நிலையாகவும் இருக்கலாம். ஏனென்றால், வடக்கு - கிழக்கை சேர்ந்த தமிழ்த் தேசிய கட்சிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், புலம்பெயர் தேசத்தில் இருக்கும் தமிழர் நலன் விரும்பிகள் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் எந்த ஒரு சிங்கள வேட்பாளருக்கும் 50 வீதத்துக்கு மேல் வாக்கெடுத்து வெல்லக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவாகாத நிலையில், சில வேளைகளில் அவர்கள் எங்களுடன் பேசலாம்.

தற்போது ஜனாதிபதியாக வருவதற்கு ஆசைப்பட்டுள்ள மூன்று வேட்பாளர்களும் வாக்குகளை எந்த வழியில் பெறலாம் என்று நினைக்கின்றார்களே தவிர, புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கவில்லை. ஏற்பட்டிருக்கும் பொருளாதார சூழ்நிலையை காட்டி பிரசாரம் செய்கின்றார்களே தவிர, இந்த பொருளாதாரச் சூழ்நிலை எப்படி ஏற்பட்டதன் என்ற அடிப்படைத் தன்மையை புரிந்து கொள்வதாக தெரியவில்லை.

எனவே, ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி எங்கள் ஒற்றுமையை நாங்கள் வெளிப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அந்த வகையில் அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் சிவில் சமூகத்தின் அழைப்பில் நேற்று (நேற்றுமுன் தினம்) நடந்த கூட்டத்தில் பங்கேற்றிருந்தன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி தங்களுக்குள் ஒரு முடிவு எடுப்பதற்கு இரண்டு கிழமை அவகாசம் கேட்டிருக்கின்றார்கள். ஆனால், கடந்த காலங்களில் கூடுதலான - பெரும்பாலான தமிழ் அரசு கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் பொது வேட்பாளர் என்ற விடயத்தை ஆதரித்திருந்தனர். அந்த வகையில் அவர்களும் ஒரு நல்ல முடிவு எடுப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். இந்த வகையில் தமிழர்கள் தங்களது ஒற்றுமையை காட்டுவதற்கு இந்த ஜனாதிபதி தேர்தலை நாங்கள் பயன்படுத்த வேண்டும் - இவ்வாறு நேற்று யாழ். ஊடக அமையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஐ)

## தமிழ்மக்களின்...

சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் வாழும் தமிழ் மக்க ளுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்கு சிங்கள, முஸ்லிம் மக்களின் ஆதரவு அவசியம். 13ஆவது அரசமைப்பு திருத்தம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னையை தீர்ப்பதற்கான அடிப்படை அடித்தளமாக அமைய வேண்டும். இதற்கான தீர்வு விரைவில் கிடைக்கும். 13ஆம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அந்தந்த மாகாண மக்கள் தமது அதிகாரங்களை பிரயோகிக்க முடியும் - என்றும் தெரிவித்தார். (ஐ)

## தமிழ்...

கோவிந்தன் கருணாகரம் கூறியிருப்பது ஆச்சரியம் அளிக்கிறது. பொது வேட்பாளர் தொடர்பில் உறுதியான முடிவை எடுங்கள் - முதலில் அதை செய்யுங்கள். அப்புறம் புறா விடு தூது, அன்னம் விடு தூது, மான் விடு தூது, தென்றல் விடு தூது என்பவைகளை பார்க்கலாம். சஜித்திடமும் பேசலாம்.

தன்னை சந்தித்த "மக்கள் - மனு வடக்கு - கிழக்கு மாகாண சிவில் சமூக தூதுக்குழு" விடம் சஜித் பிரேமதாஸ, தான் 13 ஆம் திருத்த மாகாண சபை சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவுள்ளதாகவும் அதுபற்றி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்க இருப்பதாகவும் இதன் மூலம் சிங்கள மக்களின் ஆணையை பெறவுள்ளதாகவும், எனது முன்னிலையில் உறுதியளித்தார்.

மக்கள் - மனு வடக்கு - கிழக்கு மாகாண சிவில் சமூக தூதுக்குழுவிடம் இதுபற்றி நண்பர் கோவிந்தன் கருணாகரம் கேட்டு அறியலாம்.

நான் கிளிநொச்சிக்கு, அங்கு நடைபெற்ற இலங்கை தமிழ் அரசு கட்சியின் மே தின கூட்டத்தில் சிறப்பு பேச்சாளராக - நண்பர் சிவஞானம் சிறீதரன் எம்.பியின் அழைப்பை ஏற்று வந்து கலந்து கொண்டேனே தவிர, சஜித்தின் தூதுவராக வரவில்லை. மேலும், எனது உரையில், "நான் கிளிநொச்சிக்கு சஜித்துக்கு வாக்கு கேட்டு வரவில்லை" என்றும்கூட குறிப்பிட்டேன்.

மேலும், 13 ஆம் திருத்தமான மாகாண சபை முறைமையை வடக்கு - கிழக்கு மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வாக நான் ஒருபோதும் கூறவில்லை. அப்படி நான் ஒருபோதும் கூறுவதும் இல்லை. ஆனால், மாகாண சபை முறைமை என்பது இன்றைய அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டம். இது புதிதாக வருகின்ற தீர்வு அல்ல. இன்று அரசியல் சட்டத்தில் இருப்பதை அப்படியே அமுல் செய்வதாகத்தான் சஜித் கூறியுள்ளார்.

மாகாண சபை முறைமை என்பது வடக்கு - கிழக்கு மாகாணங்களை மாத்திரம் சார்ந்தது இல்லை. அது 9 மாகாணங்களையும் சார்ந்தது. ஆகவே சஜித், வடக்கு - கிழக்குக்கு மாத்திரம் அல்ல, முழு நாட்டுக்குமே இந்த உத்தரவாதத்தை வழங்கியுள்ளார் என்பதை தமிழ் கட்சிகள் அறிய வேண்டும்.

மேலும், தமிழ் பொது வேட்பாளர் கோஷம் என்பது வடக்கு - கிழக்குக்கு மாத்திரம் பொருந்தும். மலையகம் உட்பட தென்னிலங்கைக்கு பொருந்தாது. ஏனெனில், வடக்கு - கிழக்கு ஒரு தளம். மலையகம் உட்பட தெற்கு வேறொரு தளம். இதையும் எனது உரையில் கூறினேன்.

இவ்விடயங்கள் தொடர்பில், வரலாறு முழுக்க எனக்கு மிகத் தெளிவான யதார்த்தபூர்வமான நிலைப்பாடுகள் இருக்கின்றன என்று நம்புகிறேன். இதை கோவிந்தன் கருணாகரம் அறிய வேண்டும். என்னிடம் தடுமாற்றங்கள் கிடையாது. தடுமாற்றம் இருப்பது உங்களிடம்தான். முதலில் உங்கள் தெளிவான நிலைப்பாடுகளை கூடி - கலந்து பேசி அறிவியுங்கள் - என்றுள்ளது. (ஐ -எ)

(தொடர்புடைய செய்தி பக்கம் - 08 இல்)

# பணம், அமைச்சு பதவிக்காக வேட்பாளராக நிறுத்த முடியாது

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கண்டி, மே 06

எவரிடமாவது பணம் இருக்கிறது என்பதற்காகவும், அமைச்சுப் பதவி இருக்கிறது என்பதற்காகவும் அவருக்கு ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க வாய்ப்பளித்தால் அது நியாயமானதல்ல - இவ்வாறு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பணத்துக்காக சுதந்திரக் கட்சியை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காட்டிக்கொடுத்து விட்டார். ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ என அவரால் தன்னிச்சையாக தீர்மானம் எடுக்க முடியாது என்றும் தயாசிறி கூறினார்.

கண்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே தயாசிறி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து என்னை நீக்கியமை குறித்து நான் கவலையடையவில்லை. ஆனால், கட்சிக்கும் எனக்குமிடையி லான பிணைப்பை முற்றாக இல்லாம லாக்கும் வகையில் எனது உறுப்புரிமையும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியால் பறிக்கப்பட்டமை வேதனையளிக்கிறது. எவ்வாறிருப்பினும் எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிமன்றத்தின் ஊடாக நீதி கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

கட்சியின் அங்கத்தவர்கள் அல்லாத ஒருவர் தற்போது பதில் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். மலைநாட்டு ஒப்பந்தத்தின் மூலமே எமது நாடு காட்டிக் கொடுக்கப்பட்டது. அதே போன்று தற்போது மலைநாட்டு பகுதியில் உள்ள ஒருவரால் சுதந்திர கட்சியும் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அவரே புதிய தலைவருக்கான பெயரை முன்மொழிந்துள்ளார்.

பதில் தலைவராக நியமிப்பதற்கு சுதந்திர கட்சியில் வேண்டியளவு சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால், இன்று பணத்துக்காக கட்சி காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மே தினத்தன்று விஜயதாஸ ராஜபக்ஷவே சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என மைத்திரிபால தெரிவித்துள்ளார். ஆனால், அவரால் அவ்வாறு தனித்து தீர்மானம் எடுக்க முடியாது - என்றார். (எ)

## ரூ.2.5கோடி...

இயக்கவுள்ளது. இந்தியாவின் ஷிப்பிங் கோர்ப்பரேசனும் இலங்கை அரசாங்கமும் இணைந்து இந்த நிறுவனத்தைத் தெரிவுசெய்துள்ளன.

இந்த சேவையை மலிவாகவும் பொதுமக்களுக்கு ஏற்ற விதத்திலும் வழங்குவதற்காக ஒரு வருட காலத்துக்கு மாதத்துக்கு 25 மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவை இந்திய அரசாங்கம் ஏற்க முடிவு செய்துள்ளது.

பயணிகள் கப்பல்கள் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறும் பயணிகளிடம் தற்போது அறவிடப்படும் வரியை குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் 63. 35 மில்லியன் டொலரை உதவித்தொகையாக வழங்கத் தீர்மானித்துள்ளது. முன்னர் இந்த நிதியை கடனாக வழங்கவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் முன்னேற்றம் செழிப்புக்கான அதன் பயணத்துக்கான இந்தியாவின் வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் விதத்திலேயே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## கைபேசிக்கு...

பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. கைபேசி விளையாட்டுக்கு அடிமையாகி மனநல பாதிப்பை எதிர்கொண்ட அவரின் 16 வயது மகனும் இதைத் தொடர்ந்து காணாமல் போனார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறுகையில்,

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் மகன் கைபேசி விளையாட்டுக்கு (மொபைல் கேம்ஸ்) அடிமையானவர் என்று கூறப்படுகின்றது.

அத்துடன், 16 வயதுடைய குறித்த சிறுவன் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக் கலாம். அவரின் அறையில் சில வாசகங் கள் இரத்தத்தால் எழுதப்பட்டிருந்தன. இதனால், மகனே தனது தாயை கொலை செய்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சிறார்களிடம் கைபேசிகளை வழங்குவது தொடர்பில், பெற்றோர்கள் அவதானமாக செயல்பட வேண்டும். அவர்களுக்கு கைபேசிகளை வழங்குவதால் பல்வேறு பிரச்னைகள் எதிர்நோக்க நேரிடும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

## ஓ.எல்...

அமித் ஜயசுந்தர நேற்றுத் தெரிவித்தார்.

இன்று ஆரம்பமாகும் பரீட்சைக்கு 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை பரீட்சார்த்திகளும் 65 ஆயிரத்து 331 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

அத்துடன், 3 ஆயிரத்து 527 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விசேட தேவையுடையவர்களுக்கும் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## 23சதுர...

நாடுகளின் கண்ணிவெடி நடவடிக்கைக்கான ஒருங்கிணைந்த ஒருங்கிணைப்புக் குழு ஆகியவை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரும் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தின் பணிப்பாளருமான டபிள்யூ. எஸ். சத்யானந்த, பிரதிப் பணிப்பாளர் வி. பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கில் ஒரு சதுர கிலோமீற்றர் தூரத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. அடுத்த, 3 வருடங்களில் இலங்கையை மிதிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. இன்னும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் 23 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் மாத்திரமே கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளன என்று இலங்கை பிரதிநிதிகள் மாநாட்டில் தெரிவித்திருந்தனர். (ஐ)

## வருடத்தில்...

மேலும், பெற்றோர்கள் குழந்தைகளை வேறு நபர்களிடம் தத்துக் கொடுக்கும்போது அது தொடர்பில் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளன.

பொருளாதார நெருக்கடி, திருமணத்துக்கு புறம்பான உறவுகள் போன்ற காரணங்களாலேயே பிறந்த குழந்தைகள் தத்துக் கொடுக்கப்படுகின்றனர் - என்றார்.

இதேவேளை, நாட்டில் கருக் கலைப்பு சம்பவங்களும் அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## அழுகிய நிலையில் சடலம் மீட்பு; அக்கரபத்தனையில் சம்பவம்!

அக்கரபத்தனை, மே 06

அக்கரபத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டொரிங்டன் தோட்டத்தின் மேற்பகுதியிலுள்ள வனப் பகுதியில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக அக்கரபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வனப்பகுதிக்குள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சடலத்தைக் கண்டு பொது மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இந்த சடலம் அடையாளம் காணமுடியாதவாறு அழுகிக் காணப்பட்டதுடன் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசியதாக பொலிஸார் தெரித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை அக்கரபத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி மாணவன் ஒருவர் காயம்!

வியங்கொடை, மே 06

வியங்கொடை பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் இரு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவன் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு வத்துபிட்டிவல ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வியாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவனும் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவனும் ஒரே மாணவியுடன் கொண்டிருந்த காதல் உறவின் அடிப்படையில் இரு மாணவர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மாணவி தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவனுடன் காதல் உறவை ஏற்படுத்தியதனையறிந்த தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவன் பாடசாலை முடிந்து வெளியே வரும்போது தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவனை கூரிய ஆயுதத்தால் தாக்கியமை விசாரணையில் தெரியவந்தது. (எ)

## கல்முனை மாநகர பகுதியில் கால்நடைகளால் தொல்லை!

கல்முனை, மே 06

அம்பாறை - கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வீதிகள் மற்றும் கடற்கரை பகுதிகளில் கொட்டப்படும் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமையால் கழிவுகளை உண்பதற்காக கட்டாக்காலி கால்நடைகள் அந்தப் பகுதிக்குள் நுழைகின்றன.

இதனால், வீதிகளில் நடைபயணம் மேற்டிகொள்வோர் நாய்க்கடிக்கும் இலக்காகி வருகின்றனர்.

அத்துடன், கழிவுகளை வீதிகளில் கால்நடைகள் பரப்பிச் செல்வதால், தூர்நாற்றமும் ஏற்படுவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். அத்துடன், இதனால் வீதி விபத்துக்களும் அதிகரிக்கும் ஆபத்துள்ளது. எனவே, இது விடயத்தில் அதிகாரிகள் உடனடியாகக் கவனம் எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## துப்பாக்கிச்சூடு சந்தேகநபர் விமான நிலையத்தில் கைது

ஹொரணை, மே 06

ஹொரணை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகநபர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முற்பட்டபோது நேற்றுக் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஹொரணை கிரேஸ்லண்ட்வத்த பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 35 வயதுடைய வர்த்தகர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் தற்போது ஹொரணை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த வர்த்தகருக்கும் மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# நாட்டை வெளிநாடுகளுக்கு விற்று மக்களை அடிமைப்படுத்த திட்டம்

### கஜேந்திரன் எம். பி. சாடல்

யாழ்ப்பாணம், மே 06

**கொழும்பில் நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும் போது தினமும் இந்த நாடு ஒட்டுமொத்தமாக வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டு முழுமையாக மக்கள் அடிமையாகி விடுவார்கள் போன்று இருக்கிறது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு புறம் சீனாவுக்கு எதிராக இந்திய, அமெரிக்கத் தரப்புக்கள் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன. மறு புறம் இலங்கையின் உள் ஆதிக்க விவகாரத்தில் தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக தேசிய அடையாள அட்டை தொடர்பான ஒரு வேலைத்திட்டத்தைக் கூட இந்தியாவுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது இந்த நாடு அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.- என்றார். (எ)

# பெண்ணின் பணப்பையை திருடிய பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கண்டி, மே 06

கண்டியில் ஆடை விற்பனை நிலையமொன்றில் பெண்ணொருவரின் பணப்பையைத் திருடியதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கண்டி குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பணப்பையின் உரிமையாளர் கடந்த மாதம் 9 ஆம் திகதி பணப்பையைக் காணவில்லை எனக் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, ஆடை விற்பனை நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சி. சி. ரிவி கமரா அமைப்பைக் கண்காணித்த பொலிஸார் பெண் ஒருவர் பணப்பையைத் திருடிச் சென்றதை அவதானித்தனர்.

இதனடிப்படையில் குறித்த பெண் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட போது, பொக்காவல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

# ஒரு கோடி ரூபாய் பெறுமதியான நகைகள் 'படா'விடமிருந்து மீட்பு!

கொழும்பு, மே 06

கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட "படா" என்றழைக்கப்படும் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இந்த சந்தேக நபர் தங்கம், பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் மொரட்டுவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரை ஏழு நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தங்கம் மற்றும் கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட சில கூரிய ஆயுதங்களையும் பொலிஸார் மீட்டனர்.

மொரகஹஹேன, கஸ்பேவ, பிலியந்தலை உள்ளிட்ட பல பிரதேசங்களில் தங்க நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை இந்த நபர் கொள்ளையடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான "மன்னா சமந்த" என்பவரின் உறவினர் ஒருவருக்குச் சொந்தமான வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கூரிய ஆயுதங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபருடன் இணைந்து கொள்ளையிட்ட பிரதான சந்தேகநபரான "மன்னா சமந்த" பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றதுடன், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# விவசாயிகளின் உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது!

வெலிஓயா, மே 06

வெலிஓயா, ஹலெம்பவெவ விவசாயிகள் தண்ணீர் பிரச்னை காரணமாக முன்னெடுத்து வந்த நான்கு நாள் உண்ணாவிரதப் போராட்டம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலையீட்டினால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபை விளையாட்டரங்கில் ஜயகமு சிறீ லங்கா மக்கள் நடமாடும் சேவையில் கலந்து கொண்ட அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சந்தித்த ஹலெம்பவெவ, விவசாயிகள் எதிர்கொள்ளும் தண்ணீர் பிரச்னைக்கு இதுவரை எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் தீர்வு கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், யான்ஓயாவிலிருந்து ஹலெம்பவெவ வரை நீர்ப்பாசன நீரை கொண்டு வருவதற்குத் தேவையான 225 மில்லியன் ரூபாயை பரிசீலித்து வழங்குவதற்கும் இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் எதிர்வரும் வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்படும் என அமைச்சரால் உறுதியளிக்கப்பட்டது. இதனையடுத்து உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டுவந்த விவசாயிகள் அமைப்பின் தலைவர் தமது பிரச்னை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் அமைச்சரிடம் கையளித்ததுடன், அவைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு செல்லுமாறும் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதார நிலைமையை சீர்செய்துள்ளமையால், இப்பிரச்னைக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அதிகம் வாய்ப்புள்ளதாக அமைச்சர், விவசாயிகளிடம் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு மகாவலி அதிகார சபையால் ஹலம்பவெவ ஒரு விவசாயக் குடியேற்றமாக சுமார் 300 விவசாயக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டதுடன் தற்போது சுமார் 200 குடும்பங்கள் அங்கு வசித்து வருகின்றன.

யான் ஓயா கருத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கப்பட வேண்டிய நிலையில் பல்வேறு காரணங்களால் நீர்ப் பாசனம் முறையாக வழங்கப்படவில்லை என விவசாயிகள் குற்றஞ்சுமத்தினர். இதனால் சுமார் 200 விவசாய குடும்பங்களுக்கு நீர்ப்பாசனம் கிடைக்காமல் பயிர்கள் விளைச்சல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்துக்கு நீர் கொண்டு செல்வது நாளுக்கு நாள் தாமதமாகி வருவதால் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சில காலமாக விவசாய அமைப்புக்கள் போராட்டம் நடத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org